Registered as a news paper. பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மொறாயஸ் ஒளிச்சுடர்
பல், மூக்குக் கண்ணாடியகம்
இல.05 பலாலி வீதி (அப்பலோ கிளினிக் முன்), யாழ்.
- பல் கட்டுவதற்கும்,
- பற்களுக்கு கிளிப் போடுவதற்கும்,
- இலவச கண் பரிசோதனை செய்து, நவீன ரக பிறேம்களில் மூக்குக் கண்ணாடிகளைப் பெறவும்.
(1962 முதல் யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது)
(சி-976)

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 ஆடி 04 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 அவ்வல் 19 (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை இதழ்: 291

## தலைவர் பிரபாவின் திட்டமிடலே முல்லைத் தள வெற்றிக்கு காரணம்!

### வெற்றிவிழாவில் பங்குத்தந்தை பத்திநாதர்

தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் ஆழமான திட்டமிடலின் வெளிப்பாடுதான், நாம் இன்று சுதந்திரமாக வெற்றி விழா கொண்டாடக் காரணமாக அமைந்துள்ளதென, முல்லைத்தீவு பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் அடிகளார் தெரிவித்தார்.

முல்லைத்தீவு வெற்றிப் பெருவிழா நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றும்போது, நாம் இன்று சுதந்திரமாக வெற்றிப் பெருவிழாவில் கலந்துகொண்டுள்ளோம் என்றால், அதற்குக் காரணம், தமிழீழத் தேசியத் தலைவரின் ஆழமான திட்டமிடலும், எங்கள் மாவீரர்களின் அளப்பரிய தியாகங்களுமே ஆகும் என, அவர் மேலும் குறிப்பிட்டார்.

## வரலாற்று ரீதியாக வன்னி மண்ணில் கனரக ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன

### முல்லைத்தள வெற்றிவிழாவில் கேணல் தீபன் உரை

வரலாற்று ரீதியாக - பண்டாரவன்னியனால் பீரங்கிகள் கைப்பற்றப்பட்ட வன்னி மண்ணிலேயே, தேசியத் தலைவர் வே.பிரபாகரன் - அரசபடைகளின் ஆட்லறிகளைக் கைப்பற்றினார் என்று, முல்லைத்தீவுத் தள வெற்றி நாள் நிகழ்வில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றிய வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் தெரிவித்தார்.

கேணல் தீபன் அங்கு தொடர்ந்து கூறுகையில்,

வரலாற்று ரீதியாக 1803 ஆம் ஆண்டில், முல்லைத்தீவில் நிலைகொண்டிருந்த ஐரோப்பியப் படைகளின் பீரங்கிகளை, பண்டார வன்னியன் கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

அதே மண்ணிலேயே ஆட்லறிகள் இரண்டையும், (10 ஆம் பக்கம் பார்க்க)

# முல்லைத் தளத்தின் வெற்றிவிழா எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது!

### காவலரணுக்கு முன்பாக படகுகளை நிறுத்த படையினர் பணிப்பு

பருத்தித்துறை - கற்கோவளம் பகுதியில் உள்ள மீனவர்களின் படகுகளை, தமது காவலரணுக்கு முன்பாகக் கொண்டுவந்து நிறுத்துமாறு இராணுவத்தினர் உத்தரவிட்டுள்ளனர்.

கற்கோவளம் பகுதி மீனவர்களை நேற்றுச் சந்தித்த பல்லப்பை இராணுவ முகாம் பொறுப்பதிகாரி,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பல்வேறு சிறப்பு நிகழ்ச்சிகளும் நடந்தேறின

(கிளிநொச்சி)

**'ஓயாத அலைகள் - 1' நடவடிக்கை மூலம் முல்லைத்தீவு இராணுவமுகாம் விடுதலைப் புலிகளால் தாக்கியழிக்கப்பட்ட ஏழாம் ஆண்டு வெற்றிநாள் நிகழ்வுகள் முல்லைத்தீவு நகரத்தில் பேரெழுச்சியுடன் நேற்று நடைபெற்றன. இந்த நிகழ்வில், பல்லாயிரக்கணக்கான மக்கள் உணர்வெழுச்சியுடன் பங்கேற்றனர்.**

நேற்றுமாலை 6.35 மணியளவில், முல்லைத்தீவு பஸ்நிலையத்திலிருந்து, சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியின் அணிவகுப்பு ஆரம்பமாகி நகர்ந்து செல்ல, அதன்பின்னே ஆயிரக்கணக்கான மக்கள் பின்தொடர்ந்து சென்று முல்லைத்தீவு பொது மைதானத்தை அடைந்தனர்.

அங்கு ஆரம்பமான வெற்றிவிழா நிகழ்வில் - பொதுச்சுடரினை, தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன் ஏற்றிவைத்தார்.

தமிழீழத் தேசியக் கொடியினை, கடற்புலிகளின் சிறப்புத்தளபதி கேணல் சூசை ஏற்றிவைத்தார். வெற்றிச்சுடரினை, மாலதி படையணியின் சிறப்புத்தளபதி கேணல் விதுஷா ஏற்றினார்.

'ஓயாத அலைகள்-1' வெற்றிச்சமரில் வீரகாவியமான கடற்கரும்புலி மாவீரர்களான - மேஜர் செல்லப்பிள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவுடன் இலங்கை அரசு ஆயுதக் கொள்வனவு ஒப்பந்தம்!

'இலங்கைக்கு, அமெரிக்கா ஆயுத உதவிகளை வழங்குவதற்கு முன்வந்துள்ளது. இருநாடுகளுக்கும் இடையில் ஆயுதக் கொள்வனவு குறித்து ஒப்பந்தம் ஒன்றும் விரைவில் கைச்சாத்திடப்படவிருக்கின்றது.'

- இவ்வாறு காணி அமைச்சர் ராஜித சேனாரத்தின தெரிவித்துள்ளார்.

அமெரிக்க அரசாங்கம், இலங்கைக்கு வழங்கவிருக்கும் ஆயுதங்களுக்கு, 50 வீத விலைக்கழிவுகளை வழங்குவதற்கும் இருநாட்டு அரசாங்கங்களிடமும் இணக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, விமானப்படையை அபிவிருத்தி செய்வதற்கு 400 மில்லியன் அமெரிக்க டொலரும், கடற்படை (10 ஆம் பக்கம் பார்க்க)

### தென்மராட்சிக் கரையோர படையினர் பாதுகாப்பு பலப்படுத்தப்படுகிறது

தென்மராட்சி கரையோரப் பகுதியில், படையினரின் பாதுகாப்பு வலயங்கள் பலப்படுத்தப்பட்டு வருகின்றன. சாவகச்சேரி - குடாக்கரைப் பகுதியிலிருந்து கிளாலிவரையான குடாக் கடலோரப்பகுதியூடாக, பனை மரக் குற்றிகளை நட்டு, பாதுகாப்பு வேலிகளைப் படையினர் அமைத்து வருகின்றனர்.

சாவகச்சேரி - தம்புதோட்டம் பகுதியிலிருந்து, இதற்கான பனை மரங்கள், வாகனங்களில் படையினரால் எடுத்துச்செல்லப்படுகின்றன.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.நா. அமைதிப்படை பயிற்சி கொழும்பில் பூர்த்தியானது!

### உயரதிகாரிகள் பலர் பங்கேற்றனர்

கொழும்பில், கடந்த 14 நாட்களாக நடைபெற்ற அமைதிகாப்புப் படைகளைக் கொண்டிருக்கும் நாடுகளின் இராணுவ அதிகாரிகளுக்கான பயிற்சிப்பட்டறை, கடந்த புதனன்று பூர்த்தியடைந்தது.

ஐ.நா. அமைதிப்படை திட்டத்தில் இணைவதற்கான முயற்சிகளில இறங்கியுள்ள இலங்கை, முதன் முறையாக இத்தகைய ஓர் இராணுவப் பயிற்சி பட்டறையை நடத்தியுள்ளது.

வத்தளை ரீ.்ப் ஹோட்டலில் நடைபெற்ற இப்பயிற்சிப் பட்டறையில், தென்கிழக்காசியாவைச் சேர்ந்த 16 நாடுகளின் 32 படையதிகாரிகள் கலந்துகொண்டனர். ஐ.நாவின் இந்தப் பயிற்சிச் செயலமர்வில், இலங்கை ஆயுதப்படைகளின் 11 அதிகாரிகளும பங்கேற்றனர்.

இந்தப் பயிற்சியில் பங்கேற்றவர்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கிலும் காவல்துறை தலைமையகம் அமையும்

(கிளிநொச்சி)

தமிழீழக் காவல்துறையின் கிழக்குப் பிராந்திய தலைமை அலுவலகத்தை, மிகவிரைவில் கொக்கட்டிச்சோலையில் திறந்துவைப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக, கிழக்குப் பிராந்திய காவல்துறை மேற்பார்வையாளர் கங்கை அழகன் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் தொடர்ந்து கருத்து வெளியிடுகையில் - மட்டக்களப்பு, அம்பாறைப் பகுதி மக்களுக்கு சட்டம், ஒழுங்கு பற்றி காவல்துறையினர் வீடு வீடாக விளக்கமளித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

# வடக்கு - கிழக்கு இடைக்கால நிர்வாக சபையில் புலிகளுடன் அரசு, முஸ்லிம் காங்கிரஸும் பங்கேற்பு

## அரசின் திட்டவரைபின் விவரங்கள் வெளித் தெரியவந்தன

விடுதலைப் புலிகளுக்கு அரசாங்கம் அனுப்பிவைத்துள்ள, வட - கிழக்குக்கான இடைக்கால நிர்வாகம் பற்றிய திட்டவரைபின்படி - அமைக்கப்படவுள்ள நிர்வாக சபையில், விடுதலைப் புலிகளின் பெரும்பான்மையான பங்கேற்புடன் அரசாங்கத்தரப்பிலிருந்தும், முஸ்லிம் காங்கிரஸ் தரப்பிலிருந்தும் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

அரசாங்கம் நியமிக்கவுள்ள தமது தரப்பு உறுப்பினர்களில், பொ.ஐ.முவைச் சேர்ந்தவர்களும் உள்ளடக்கப்படுவார்கள் எனத் தெரியவருகிறது.

**இடைக்கால நிர்வாகத்தின் தலைவர் நியமனம்**

இதேவேளை - இந்த இடைக்கால நிர்வாக சபைக்கான தலைவரை நியமிப்பது பற்றி, இரண்டு மாற்றுவழிகளை அரசாங்கம் பிரேரித்திருப்பதாகவும் தெரியவருகிறது.

இதன்படி - ஒரு மாற்றுவழியில் விடுதலைப் புலிகளையும், அரசாங்கத்தரப்பையும் சேர்ந்த இருவர் தலைமைப் பொறுப்பை ஏற்கலாம். அவர்கள் இருவரும் சபையின் எந்தத் தீர்மானத்தின் மீதும் 'வீட்டோ' அதிகாரத்தைக் கொண்டிருப்பர்.

இரண்டாவது மாற்றுவழியின்படி - சபையிலுள்ள உறுப்பினர்களிலிருந்து தலைவர் தெரிவுசெய்யப்படலாம். இவ்வாறு தெரிவு நடைபெறும் பட்சத்தில், சபையின் முடிவுகள் பெரும்பான்மை உறுப்பினர்களின் சம்மதத்தைப் பெறுவதுடன், சபையிலுள்ள முஸ்லிம் அல்லது சிங்கள சமூகத்தின் உறுப்பினர்களின் பெரும்பான்மைச் சம்மதத்தையும் பெறவேண்டும்.

**இடைக்கால நிர்வாகத்திற்குள்ள அதிகாரங்கள்**

பொலிஸ் மற்றும் பாதுகாப்பு, காணி, வரிவிதிப்பைத் தவிர்ந்த - புனர்வாழ்வு, புனரமைப்பு, மீள்குடியேற்றப் பரப்புக்களில் இடைக்கால நிர்வாகம் அதிகாரங்களைக் கொண்டிருக்கும.

புனர்வாழ்வு, புனரமைப்பு மீள்குடியேற்றம் ஆகிய விடயங்களில் கொள்கை வகுத்தலையும், அமுல்படுத்தலையும் கண்காணித்தலையும் இடைக்கால நிர்வாகசபை கவனித்துக்கொள்ளும்.

இதேவேளை - இந்த இடைக்கால நிர்வாகசபைக்கு விசேட ஆணையாளர் ஒருவரை நியமிப்பது பற்றியும், இவரது கடமைகள் பற்றியும் அரசின் திட்டவரைபில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

**நிதி வழங்கப்படும் முறைகள்**

இடைக்கால நிர்வாகசபை - திட்டங்களுக்கான நிதி வளங்களை, வட - கிழக்கு புனர்வாழ்வு நிதியத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளும்.

இதேவேளை, வட - கிழக்கு (10 ஆம் பக்கம் பார்க்க)

# மாகாண மட்ட தமிழ்த்தினப் போட்டி; வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம்!

இந்த ஆண்டுக்கான வட- கிழக்கு மாகாண தமிழ்மொழித்தினப் போட்டியில் இதுவரை நடைபெற்ற எழுத்தாக்கப் போட்டி முடிவுகளை, வட- கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர் வெளியிட்டுள்ளார். போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு -

**ஆக்கம் - எழுத்து**
**பிரிவு I**

1 ஆம் இடம் - செல்வி ம.பிரசாந்தினி (புனிதபிரான்சிஸ் சவேரிடர் ம.வி., திருகோணமலை), 2 ஆம் இடம் - செல்வி வ.ஹேரசிகா (யாழ். புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம், யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் - உ.வெ.பாத்திமா றிஸ்னா (இமால் மரியான் கல்லூரி, கல்முனை).

**கட்டுரை வரைதல் - கடிதம் எழுதல்**
**பிரிவு II**

1 ஆம் இடம் - ஆரணிரஞ்சன் (புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை), 2 ஆம் இடம் - நவரெட்ணராசா பவித்திரா (புனித திரேசா கல்லூரி, கிளிநொச்சி), 3 ஆம் இடம்- தி.காண்டீபன் (மண்டூர் 13 - விக்கினேஸ்வரா இந்துக்கல்லூரி, திருகோணமலை).

**கட்டுரை வரைதல் - கடிதம் எழுதுதல்**
**பிரிவு III**

1 ஆம் இடம் - ஜே.கமியா (அல்மனார் மத்திய கல்லூரி, கல்முனை), 2 ஆம் இடம் - சி.சிவப்பிரகாந்த (இ.கி.ச.ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி - திருகோணமலை) 3 ஆம் இடம்- உதயகுமார் அனுஷாந் (புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு).

**கட்டுரை வரைதல், சுருக்கம் எழுதுதல், கவிதை நயத்தல் - பிரிவு IV**

1 ஆம் இடம் - சி.இலக்கியா (உடுப்பிட்டி மகளிர், யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் - சி.எமில்டா ஜோஜினி (கருங்கண்டல் றோ.க.ம.வி., மன்னார்), 3 ஆம் இடம் - ச.அருட்செல்வம் (அரசடித்தீவு விக்கினேஸ்வரா வித்தியாலயம், மட்டக்களப்பு).

**தமிழியற் கட்டுரை வரைதல், திறனாய்வு செய்தல், இலக்கிய சொற்பொழிவாக்கம், இலக்கண வினாக்களுக்கு விடை எழுதல்.**

1 ஆம் இடம் - தி.காயத்திரி (மகாஜனாக் கல்லூரி, யாழ்ப்பாணம்), 2 ஆம் இடம் - விஜயகுமார் அருணா (வட்டக்கச்சி ம.வி., கிளிநொச்சி), 3 ஆம் இடம் - சி.சஜந்தினி (அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரி, கல்முனை).

**குறுநாடக ஆக்கம் - திறந்த போட்டியாளர் - பிரிவு I**

1 ஆம் இடம் - வி.விக்னேஸ்வரன் (புதுக்குளம் மகாவித்தியாலயம்- வவுனியா), 2 ஆம் இடம் - எம்.எம். றிஸ்னா (அல்மனார் மத்திய கல்லூரி - கல்முனை), 3 ஆம் இடம்- வேலும்மயிலும் கஜேந்திரன் (மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை - யாழ்ப்பாணம்).

**கவிதை ஆக்கம் - திறந்த போட்டியாளர் - பிரிவு IV**

1 ஆம் இடம் - ரா.ப.அருஸ் (கிண்ணியா மத்திய கல்லூரி, திருகோணமலை), 2 ஆம் இடம் - றா. அரங்கா (சங்கானை சிவப்பிரகாச வித்தியாலயம், யாழ்ப்பபாணம்), 3 ஆம் இடம் - றொ.றொபின்சா (ஆண்டான்குளம் றோ.க.த. பாடசாலை)

**கவிதை ஆக்கம் - திறந்த போட்டியாளர் - பிரிவு V**

1 ஆம் இடம் - இ.சுதர்சனா (சைவப்பிரகாச மகளிர் கல்லூரி - வவுனியா), 2 ஆம் இடம் - இ.மோகனாம்பிகை (பூநகரி மகா வித்தியாலயம் - கிளிநொச்சி), 3 ஆம் இடம்- ப.சைந்தினி (சாவகச்சேரி இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்).

**சிறுகதை ஆக்கம் - திறந்த போட்டியாளர் - பிரிவு IV**

1 ஆம் இடம் - ப.நிருத்திகா (கிளிநொச்சி மகா வித்தியாலயம் கிளிநொச்சி), 2 ஆம் இடம் - ந.கண்ணதாஸ் (வேலணை சைவப்பிரகாச வித்தியாலயம், யாழ்ப்பாணம்), 3 ஆம் இடம் - க. திவ்வியா (புனித மரியாள் கல்லூரி, திருகோணமலை).

**சிறுகதை ஆக்கம் - திறந்த போட்டியாளர் - பிரிவு V**

1 ஆம் இடம் - இ.ரிஷிகாந்த் (இ.கி.ச. ஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி - திருகோணமலை), 2 ஆம் இடம் - லோகராஜா கோபிநாத் (புனித மைக்கல் கல்லூரி, மட்டக்களப்பு), 3 ஆம் இடம் - எம்.தஸலிம் (சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மகா வித்தியாலயம் - கல்முனை).

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து - விசேட பிரிவு I**

3 ஆம் இடம் - ஜீவி.சமத் (திஸ்ஸ மகாவித்தியாலயம், திருகோணமலை), 2 ஆம் இடம் - கல்ப்பனா றங்கினி விக்கிரமசிங்க (பரக்கும் மகா வித்தியாலயம், வவுனியா),

**சிங்கள மாணவர்களுக்கான தமிழ் உறுப்பெழுத்து - விசேட பிரிவு II**

1 ஆம் இடம் - ஸ்ரீ ஜி.பி.தீகாயு நவந்தக (திஸ்ஸ மகாவித்தியாலயம், திருகோணமலை),

2 ஆம் இடம் - மதுறிகா பிரியதர்சினி பீரிஸ் (பரக்கும் மகா வித்தியாலயம், வவுனியா).

# சின்னஞ்சிறு செய்திகள்

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

(மல்லாகம்)

பன்னாலை - கணேச சனசமூக நிலையத்தின் முன்பள்ளி வருடாந்த விளையாட்டுப் போட்டி, இன்று பி.ப. 2 மணிக்கு சன்சமூகநிலைய மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக வலி.வடக்கு பிரதேசசபை வேலை அத்தியட்சகர் ஐ.சிவலோகநாதன் கலந்துகொள்வார். சனசமூக நிலையத் தலைவர் செ.சிவபாலன் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெறும். (68,72)

## பாலர் விளையாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வண்ணை, வடமேற்கு கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்க முன்பள்ளிக் கல்வி நிலைய ஆறாவது வருட பாலர் விளையாட்டுவிழா, இன்று பி.ப. 1 மணிக்கு, ஆனைக்கோட்டை லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

திருமதி ப.சுப்பிரமணியம் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் - பிரதம விருந்தினராக தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் யாழ்.மாவட்டப் பணிப்பாளர் ஜெயராஜ் கலந்துகொள்வார்.

## கோப்பாய் பாலர் பாடசாலை விடுதி

கோப்பாய் வடக்கில் - பாலர் பாடசாலை விடுதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டு, நிதியின்மையால் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்தன. தற்போது, 1.4 மில்லியன் ரூபா நிதி கிடைக்கப்பெற்றதையடுத்து, மீண்டும் பாலர் பாடசாலை விடுதி அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

## பொதுக்கூட்டம்

கோப்பாய் வடக்கு - ஸ்ரீ சித்திர வேலாயுதர் சுவாமி கோவில் விசேட பொதுக்கூட்டம், இன்று பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளதால், சகல அங்கத்தவர்கள் மற்றும் நிர்வாகசபை உறுப்பினர்களையும் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (68)

## சுன்னாகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம்

சுன்னாகம் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினால், மருதனார்மடம் றொட்டியாலடிப் பகுதியில் - 3 மில்லியன் ரூபா செலவில் புதிதாக எரிபொருள் நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இந்த இடத்தில் சங்கத்தின் எரிபொருள் விற்பனைப்பகுதி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது (68)

# தந்தை செல்வா அறங்காவலர்சபை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது!

## சம்பந்தன் தலைவராக தெரிவு

தந்தை செல்வா நினைவு அறங்காவலர்சபை புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற கூட்டத்தில், மேற்படி சபை புனரமைப்புச் செய்யப்பட்டிருக்கிறது.

இச்சபைக்கு புதிய தலைவராக தமிழர் விடுதலைக்கூட்டணியின் செயலாளர் நாயகம் இரா.சம்பந்தன் நியமிக்கப்பட்டிருக்கிறார். இச்சபைக்காக, மேலும் இருவர் உபதலைவர்களாக நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

முன்னர் - இச்சபையின் தலைவராக, மறைந்த கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் இருந்து வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சிறுவர் புனர்வாழ்வு நிலையத்துக்கு மூதூரில் அடிக்கல் நாட்டுவிழா!

யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன் - போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வாழ்வினை மேம்படுத்துவதற்கான நடவடிக்கையை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் மேற்கொண்டுள்ளது.

பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான தொழிற்பயிற்சி வசதிகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளை, தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செய்துவருகிறது.

மூதூர் கிழக்குப் பிரதேசத்தில் இதற்கான பாரிய கட்டிடத் தொகுதியொன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றுள்ளது.

யுனிசெப் நிறுவனத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி கிறீஸ்டினா வாட் ஹென்றி, விடுதலைப் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் திலக், தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் திருகோணமலை மாவட்டப் பணிப்பாளர்களான - மாதவராசா, குமரகுருபரன் ஆகியோர் இதற்கான அடிக்கல்லினை நாட்டி வைத்துள்ளனர்.

# தேர்தல் சீர்திருத்த ஆணைக்குழு தலைவராக தினேஷ் குணவர்த்தனவை நியமிக்கமுடியாது!

## மங்கள சமரவீர அரசுமீது கண்டனம்

(கொழும்பு)

தேர்தல் நடைமுறையைத் திருத்தியமைப்பதற்காக அமைக்கப்பட்டுள்ள, நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் பதவியை - தினேஷ் குணவர்த்தனவுக்கு வழங்குவதற்கு, அரசாங்கத்திற்கு உரிமையில்லை என்று, பொ.ஐ.முவின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள தேர்தல் நடைமுறையை மாற்றி அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுவருவதாகவும் - இதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழு அமைக்கப்பட்டு, இதன் தலைவராக தினேஷ குணவர்த்தன நியமிக்கப்படவுள்ளதாகவும், அமைச்சரவைப் பேச்சாளர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்திருந்தார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின தலைவராக தினேஷ் குணவர்த்தனவை நியமிப்பதற்கு அரசாங்கத்திற்கு அதிகாரம் இல்லை.

அரசாங்கத்தின் இந்த யோசனை- பொதுஜன ஐக்கிய முன்னணியைப் பிளவுபடுத்த மேற்கொள்ளப்படும் சதியென்றும் மங்கள சமரவீர மேலும் தெரிவித்தார்.

(01)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் சபிண்டீகரண அழைப்பும்

தோற்றம் 1975 - 10 - 22



மறைவு 2003 - 06 - 20

## திருமதி சிவபாலன் நாமகள்

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கு அணைந்து எத்தனை யுகம் ஆனாலும், எங்கள் மனங்களில் நீ என்றும் சுடர் ஒளியாக இருப்பாய். உனது ஆத்மா சாந்தியடைய எங்கள் குலதெய்வமான நுணாவில் சிதம்பர விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

எமது அன்புத் தெய்வத்தின் சபிண்டீகரணக் கிரியைகள் இன்று (20.07.2003) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு, மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*சரசாலை வடக்கு,*
*சாவகச்சேரி.*
*(அம்பிகா டிஸ்பென்சறி, சாவகச்சேரி)*

- குடும்பத்தினர்.

(424)

## சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள GJ தொடர் இலக்கமுள்ள **CD 125 BENLY** மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு.

கிருஷ்ணமூர்த்தி, தேவி அச்சக ஒழுங்கை, 114/19 நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (T.P - 2789)

(421).

### வேலையாட்கள் தேவை

கோழிப் பண்ணையில் வேலை செய்வதற்கு ஆட்கள் தேவை. ஊக்கமாக வேலை செய்பவர்களுக்கு நல்ல சம்பளமும் உணவும் தரப்படும். தங்கியிருத்தல் வேண்டும். உடன் நேரில் வரவும்.

தனபாலசிங்கம், (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு) 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தியடி, நல்லூர். (423)

### தட்டச்சு வகுப்புக்கள்

தமிழ், ஆங்கில தட்டச்சு வகுப்புக்கள் புதிய பிரிவு 23.07.2003 இல் ஆரம்பம்.

தொடர்பு:- **8/1**, அம்மன் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

(சி-1253)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை

சரத்குமார், மீனா, ரம்யாகிருஷ்ணன் நடித்த

**பாறை**

காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.நே)

இன்றுமுதல்

**THE ART OF WAR**

இரவுக் காட்சி. 8.45 (பு.நே)

(சி-1338)

**ராஜா** யாழ்ப்பாணம்.

இலங்கையிலும், இந்தியாவிலும் ஒரே தின வெளியீடு

மாதவன், ஜோதிகா, ஸ்ரீதேவி நடித்த A.V.M இன்



**பிரியமான தோழி**

10.30, 2.30, 6.30.9.30

ரிக்கெற் முற்பதிவு செய்து கொள்ளலாம்.

இயக்கம்: விக்ரமன

(சி-1137)

# கிளிநொச்சி மாவட்டச் செயலகத்திலுள்ள (கச்சேரி) புனர்வாழ்வுக் கிளையின் பொறியியலாளர் பதவிக்கான வெற்றிடம்

குடிசார் பொறியியலாளர் பதவிக்கான தகைமைகளையுடைய, இளைய பொறியியலாளர்களிடமிருந்தும், வேறு இடத்திலிருந்து இங்கு இடமாற்றம் பெற்றோ அல்லது மீளச் சேவையிலோ கடமையாற்ற விரும்புவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பங்களை 30.07.2003 இற்கு முன், அரசாங்க அதிபர், கச்சேரி, கிளிநொச்சி என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கோரப்படுகின்றது.

தி.இராசநாயகம்
அரசாங்க அதிபர்,
கிளிநொச்சி மாவட்டம்.

(சி-1252)

## வட-கிழக்கு அபிவிருத்தி; செய்தி சேகரிப்பதில் வெளிநாட்டவர் ஆர்வம்!

(யாழ்ப்பாணம்)

வட- கிழக்கின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகள் தொடர்பான செய்திகளைச் சேகரிப்பதில், வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்கள் அதிக ஆர்வங்காட்டிவருகின்றன.

சர்வதேச ரீதியில் செயற்படும் பல செய்தி நிறுவனங்கள் - இவ்வாறான செய்திகளை அண்மைக்காலமாக மிக ஆர்வத்துடன் சேகரித்து வருகின்றன.

மேற்படி செய்தி நிறுவனங்களைச் சேர்ந்த செய்தியாளர்கள் பலர் ஏற்கனவே கிழக்குப் பகுதிகளுக்கு நேரடியாக விஜயம் செய்துள்ளனர்.

இவ்வாறான பல செய்தியாளர்கள் குழுக்கள் இம்மாத இறுதியிலும், அடுத்தமாத ஆரம்பத்திலும் யாழ்ப்பாணம் உட்பட வட - கிழக்குப் பகுதிகளுக்கு விஜயம் செய்யவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# படையினர் எம்மைச் சீண்டி வருகின்றனர்; தலைவர் வழியில் பொறுமையாயுள்ளோம்!

## மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி ரமேஷ்

வட-கிழக்கில் வாழ்கின்ற தமிழர்களின் இழந்துபோன கல்வி, பொருளாதார அபிவிருத்தி போன்றவற்றை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு, மிகவும் அர்ப்பணிப்புடன் செயற்பட பட்டதாரிகள் முன்வந்து உழைக்க வேண்டுமென்று, நேற்று முன்தினம் வந்தாறுமூலையிலுள்ள பட்டதாரிகள் ஒன்றியத்தினால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட கல்வி நிலையத்தைத் திறந்துவைத்து உரைநிகழ்த்திய, மட்டு - அம்பாறை சிறப்புத் தளபதி ரமேஷ் தெரிவித்தார்.

ஒன்றியத்தின் தலைவர் ந.அருட்பிரகாசம் தலைமையில் நடைபெற்ற மேற்படி நிகழ்வில் தொடர்ந்து உரை நிகழ்த்திய, மட்டு-அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஷ்- தனது உரையில் மேலும் குறிப்பிடும்போது-

இலங்கையின் கல்வி, பொருளாதார அபிவிருத்தியில் எமது வடகிழக்கை ஒப்பிட்டுப்பார்க்கையில், 20 வருடகாலம் பின்தங்கிய நிலையில் நாம் உள்ளோம். ஆகவே, அவற்றை மீளககட்டியெழுப்புவற்காக, எமக்குக் கிடைத்த இந்தச் சமாதான வாய்ப்பைப் பட்டதாரிகள் பயன்படுத்த வேண்டும் எனத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்தினரின் நிலைப்பாடு தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ரமேஷ்- நாம் பொலிஸ், இராணுவ, விசேட அதிரடிப்படையின் உயரதிகாரிகளுடன் அடிக்கடி பேச்சுவார்த்தை நடாத்தும்போது, உண்மையில் ஒரு புரிந்துணர்வுடன் பேசுகிறோம். மிகவும் நல்ல மனத்திருப்தியுடன் சமாதானத்துக்கு ஒத்துழைப்பதாக அதிகாரிகள் கூறுகின்றபோதிலும் - படையினர், பொலிஸாரின் நடவடிக்கைகள் மிகவும் முரணாக உள்ளதாகத் தெரிவித்தார்.

அடிக்கடி எமது போராளிகளைக் கைதுசெய்வது, அண்மையிலும் மட்டு - அம்பாறை மகளிர் அரசியற்துறைப் பொறுப்பாளரைக் கைது செய்ய முயன்றதுபோன்ற பலவிடயங்களில், படையினர் எம்மைச் சீண்டிவிட்டு வேடிக்கைபார்க்க நினைக்கின்றனர்.

ஆனால், எமது தலைவரின் உறுதியான வழிநடத்தலில் - மிகவும் பொறுமையாகவும், நிதானமாகவும் செயற்படுகின்றோம் என, ரமேஷ் மேலும் தெரிவித்தார்.

இந்தத் திறப்பு விழா நிகழ்வுக்கு வருகைதந்தபோது, வேண்டுமென்றே பொலிஸார் என்னைச் சோதனையிட முயன்றனர். இதுபோன்ற விடயங்கள்மூலம், உண்மையில் போராளிகளை ஆத்திரமூட்டவே படையினர் திட்டமிட்டிருக்கின்றனர். ஆகவே, நாம் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற உளவியல்ரீதியான அரசியல் நகர்வுகளுக்கு, எம்மாலான தியாகங்களை நாங்கள் செய்து



ரமேஷ்

கொண்டு வருகின்றோம். இந்த விடயத்தில் பொதுமக்களின் பங்களிப்பும் மிகமிக அவசியம் என ரமேஷ் மேலும் கூறினார்.

மேற்படி நிகழ்வில் - மட்டு. அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், கிழக்குப் பல்கலைக்கழகப் பதிவாளர் வே.தி. ஹரீஸ், கல்வியற்துறைத் தலைவர் செல்வராஜா, குடும்பிமலைக்கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் ஜெயா ஆகியோருடன் மேலும் பல கல்வி அதிகாரிகளும், பாடசாலை மாணவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

## இலங்கையில் சி.ஐ.ஏ. தலையீடு; சாடுகிறார் ஜனாதிபதி சந்திரிகா!



அமெரிக்காவின் புலனாய்வுச் சேவையான சி.ஐ.ஏ. - இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களில் தலையிடுவது ஏற்றுக்கொள்ளப்பட முடியாதது என, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாக, பொ.ஐ.முன்னணியின் பேச்சாளர் மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

அண்மையில் கொழும்பில் நடந்த புலனாய்வுச் சேவைகளின் தலைவர்களுக்கான முக்கியமான மாநாடொன்றில், அமெரிக்காவின் புலனாய்வுச் சேவையான சி.ஐ.ஏ. முக்கிய அதிகாரி ஒருவர் பங்குபற்றியது - ஒரு நட்பு நாடு ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட தவறான நடவடிக்கை என, ஜனாதிபதி மேலும் கருதுவதாக மங்கள சமரவீர தெரிவித்திருக்கிறார்.

குறிப்பிட்ட சி.ஐ.ஏ. அதிகாரி நாட்டின் பாதுகாப்பு அமைச்சகத்துக்குள் இருந்துகொண்டு - கேள்விகளை எழுப்புவதும், பதில்களைப் பெறுவதில் நாட்டம்காட்டுவதும் - நாட்டின் பாதுகாப்புக்கு உகந்ததல்ல எனவும், அவரை, முக்கியமான பாதுகாப்பு மாநாட்டுக்கு அழைத்தது - நாட்டின் பாதுகாப்பைக் கேவலப்படுத்துகின்ற ஒரு குற்றச்செயல் எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கருதுவதாக, மங்கள சமரவீர மேலும் தெரிவித்திருக்கிறார்.

# குரங்குப்பாஞ்சான் விவகாரத்தில் சுமுகத் தீர்வையே விரும்புகிறோம்!

## ஒஸ்ரின் பெர்னாண்டோ கூறுகிறார்

திருமலை - குரங்குபாஞ்சான் பகுதியில் விடுதலைப் புலிகள் முகாம் அமைத்திருப்பதான விவகாரத்தில் - இறுக்கமற்ற, தளர்வான ஒரு நிலைப்பாட்டையே கடைப்பிடிக்க, அரசு தீர்மானித்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்திருக்கிறார்.

நெருக்கடிகள் மிகுந்துவரும் வேளையில், அரசாங்கம் சமரசமான போக்கொன்றைக் கையாளவே விரும்புவதாகவும், புரிந்துணர்வின்மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ளவே அரசாங்கம் முயற்சிப்பதாகவும் ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நெருக்கடிகள் மூலம், மீண்டும் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கும் எண்ணம் அரசாங்கத்திடம் இல்லை. அரசாங்கம் இவ்வாறான விவகாரங்களில் தளர்வுக் கொள்கையே கடைப்பிடிக்க விரும்புகின்றது. அமைதியை ஏற்படுத்துவதற்காக அடிப்படியான அணுகுமுறை ஒன்றுதான் தேவையாகவுள்ளது. நாங்கள் பொறுமையாக இருப்பதன் மூலம், வெற்றிகளைச் சம்பாதிப்போம். அதேவேளை விடுதலைப் புலிகள் - குரங்குபாஞ்சான் போன்ற சம்பவங்கள்மூலம் பின்னடைவையே எதிர்கொள்வார்கள் என்றும் ஒஸ்ரின் பெர்ணான்டோ மேலும் கூறியுள்ளார்.

## கண்ணி அகற்றும் பணிகளில் பெண்கள்; சர்வதேச ஊடகங்கள் முக்கியத்துவம்!

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்கொள்ளப்படுகின்ற கண்ணிவெடிகள், மிதிவெடிகள் அகற்றும் நடவடிக்கைகளில் புதிதாகப் பெண்களும் இடம்பெற்றிருப்பது, சர்வதேச ஊடகங்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்துள்ளது.

சர்வதேச ஊடகங்கள் யாவும் - இந்தச் செய்தியை முக்கியத்துவப்படுத்தி பிரசுரித்து வருகின்றன. சர்வதேச ரீதியில் பல இணையத்தளங்களும், இது தொடர்பான செய்திகளை வெளியிட்டு வருகின்றன.

கடந்த ஓரிரு தினங்களுக்கு முன்னர் 'சனல் நியூஸ் ஏசியா' என்ற இணையத்தளமும், மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவில் பெண்களின் பங்குபற்றி முக்கியத்துவம் கொடுத்து, ஒரு செய்தியைப் பிரசுரித்திருந்தது. இந்த இணையத்தளத்தின் செய்தியில் - கண்ணிவெடி அகற்றுகின்ற ஆபத்தான பணிகளில் - பெண்கள் மிகத்திறமையான முறையில் பணியாற்றிவருவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

## ஐ.தே.கவுக்கு ஆதரவு திரட்ட முக்கிய பிரமுகர்கள் பிரசாரம்

### கட்சியைப் பலப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

ஐ.தே.கட்சியினர் தென்னிலங்கையில் வீடுவீடாகச் சென்று, உறுப்பினர்களைத் திரட்டும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் பொலனறுவையில் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பணியில் கலந்துகொள்வதற்காக, கொழும்பிலிருந்து கட்சியின் முக்கிய பிரமுகர்கள் பொலனறுவைக்குச் சென்றிருந்தனர்.

பொலனறுவையிலுள்ள 214 கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் சென்று, பிரசாரப் பணியில் இவர்கள் ஈடுபட்டுள்ளதுடன், புதிய வேலைத்திட்டங்களையும் அறிமுகப்படுத்தி வருகின்றனர்.

தென்பகுதிகளில் - ஐ.தே.கட்சிக்கான ஆதரவாளர்களை அதிகரிக்கும் நோக்கில் ஆரம்பிக்கப்பட்டுள்ள, இந்த ஆட்களைத் திரட்டும் பணியின் இறுதிநிகழ்வு, இன்று நடைபெறவுள்ளது. இதில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் கலந்துகொள்ளவுள்ளார். (01)

# இடைக்கால நிர்வாகத்துக்கு ஆதரவுதேட சகல கட்சிகளையும் கூட்டணி சந்திக்கும்!

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றினை அமைப்பது தொடர்பாக, அனைத்துக் கட்சிகளின ஆதரவைப் பெற்றுக்கொள்ளும் முகமாக - தமிழர் விடுதலைக் கூட்டணி சகல அரசியற்கட்சிகளுடனான பேச்சுக்களை ஆரம்பிக்க இருப்பதாக அக்கட்சிக்கு நெருக்கமான வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எதிர்வரும் நாட்களில் அரசியற் கட்சிகள் தொடர்பான இந்தப் பேச்சுக்கள் ஆரம்பமாகும் என, கூட்டணி வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதன்படி குறிப்பாக - பொதுஜன ஐக்கிய முன்னணியுடனான சந்திப்பு விரைவில் நடைபெறும் என, தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர் தெரிவித்தார்.

சமாதான முயற்சிகளைத் தடைகளின்றி முன்னெடுக்கவும், வடகிழக்கில் இடைக்கால நிர்வாகம் ஒன்றிற்கான ஆதரவைச் சகல மட்டங்களிலும் பெற்றுக்கொள்ளும் வகையிலும் இந்தப் பேச்சு முயற்சிகள் அமையும் என, கூட்டணி சிரேஷ்ட தலைவர் தெரி வித்திருக் கின்றார்.

சமாதானப் பேச்சுக்களைத் தொடர்ந்து முன்னெடுப்பதற்கு இடைக்கால நிர்வாகம் அமைக்கப்படவேண்டிய அவசியம் பற்றி, கூட்டணி சகல கட்சிகளிடமும் வலியுறுத்தும் எனவும் அவர் கூறியிருககின்றார்.

## 20 ஆயிரம் ஏழை மாணவருக்கு புதிய புலமைப் பரிசில் திட்டம்!

வட- கிழக்கு உட்பட நாடு முழுவதும் அமுல்செய்யும் வகையிலான புதிய புலமைப்பரிசில் திட்டம் ஒன்றை, கல்வி அமைச்சு அறிமுகப்படுத்தியுள்ளது.

'சிசுவாவிய' என்ற பெயரில் ஆரம்பிக்கப்படவிருக்கும், இப்புதிய புலமைப்பரிசில் திட்டத்தின்கீழ் நாடு முழுவதிலும் உள்ள வறுமைக்கோடடுக்கு உட்பட்ட மாணவர்கள், பயனடைவதற்குப் படிப்படியாக வாய்ப்பு ஏற்படவிருக்கிறது.

முதற்கட்டமாக 20 ஆயிரம் மாணவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளது. எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் - இப்புலமைப்பரிசில் திட்டம் அமுலுக்குக் கொண்டு வரப்படவிருக்கிறது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியுடன், மேற்படி புலமைப்பரிசில் திட்டம் அமுல்செய்யப்படவிருக்கிறது. இதற்கான ஆரம்ப ஏற்பாடுகள் அனைத்தும் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. (01)

## 'றொய்ட்டர்' செய்தியாளர்கள் எண்ணிக்கை குறைப்பு!

றொய்டர் செய்தி நிறுவனம் தனது செய்தியாளர்களின் எண்ணிக்கையைக் குறைத்துள்ளது.

இச்செய்தி நிறுவனத்தின் பணிப்பாளர் ஒருவர் கடந்தவாரம் கொழும்புக்கு விஜயம் செய்திருந்தார். இலங்கையில் தமது செய்தியாளர்களின் பணியை ஒழுங்குபடுத்தும் முகமாகவே, இலங்கைக்கு அவர் வந்திருந்தார்.

இவ்வாறு உலகம் முழுவதிலும் உள்ள முக்கியத்துவம் குறைவான பகுதிகளில் கடமையாற்றும் 'றொய்டர்' செய்தியாளர்களைப் பணியிலிருந்து இடைநிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை மேற்படி செய்திநிறுவனத்தால் 450 செய்தியாளர்களை சேவையிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருக்கின்றனர்.

## அமெரிக்க பதில்தூதுவர் புதுடெல்கிக்கு பயணம்!

இலங்கைக்கான பதில் தூதுவராகக் கடமையாற்றிவரும் டேவிட் காம்ப் புதுடெல்கி பயணமாகியுள்ளார்.

அமெரிக்க அரசின் பிரதி இராஜாங்கச் செயலராகவும் கடமையாற்றிவரும் இவர், உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதுடெல்கிக்குச் சென்றுள்ளார்.

புதுடெல்கியில் சில தினங்கள் தங்கியிருந்து, இவர் இந்திய இராஜதந்திரிகளுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளார். அத்துடன், இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் செயற்பாடுகள் குறித்தும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவார். அடுத்தவாரம், இந்தியாவிலிருந்து வொஷிங்ரனுக்கு இவர் புறப்பட்டுச் செல்லவுள்ளார்.

# உலகவங்கித் திட்டங்களை மேற்பார்வையிட
# பிரதம இணைப்பாளர் விஜயம் செய்தார்!

## இலக்குகளைச் சென்றடைவது பற்றியும் ஆராய்வு

(கொழும்பு)

உலகவங்கியின் இலங்கைக் கான பிரதம இணைப்பாளர் அடம்ஸ் போட்ஸ்மன் - உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டு, கொழும்புக்கு வந்து சேர்ந்துள்ளார்.

வொஷிங்ரனிலிருந்து, இலங்கை விவகாரங்கள் குறித்த விடயங்களைக் கையாள்கின்ற இந்த அதிகாரி - இந்தவார ஆரம்பத்தில் கொழும்பை வந்தடைந்தார்.

நேற்றுமுன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற வட - கிழக்கு அபிவிருத்தி தொடர்பான முக்கிய கூட்டம் ஒன்றிலும், இவர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

உலகவங்கியின் நிதியுதவியுடன், இலங்கையின் வட - கிழக்குப் பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் செயற்திட்டங்கள் குறித்து, இந்த அதிகாரி அதிககவனம் செலுத்தி வருகின்றார்.

செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான உலகவங்கியின் பிரமாணங்கள் அனைத்தும், இலங்கையிலும் பின்பற்றப்படுகிறதா என்பது குறித்து, இவர் விரிவாக ஆராய்ந்து வருகிறார். இந்த விடயம் தொடர்பான பூரண அறிக்கை ஒன்று - மிகவிரைவில் உலகவங்கியின் தலைமையகத்துக்கு அனுப்பிவைக்கப்படவிருக்கிறது.

## திலீபன் மருத்துவமனை ஏற்பாட்டில்
# அவுஸ்திரேலிய மருத்துவர்கள் ஆழியவளையில் விசேடசேவை

ஆழியவளை தியாக தீபம் திலீபன் மருத்துவமனையில், அவுஸ்திரேலியாவிலிருந்து வருகைதந்த மருத்துவர்களினால், பல் வைத்தியம் உட்பட விசேட சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டன.

கடந்த புதன்கிழமை மேற்கொள்ளப்பட்ட விசேட மருத்துவ சேவையில், 400 நோயாளர்கள் சிகிச்சை பெற்றனர்.

இதேவேளை - ஐயன்குளம், அளம்பில் ஆகிய இடங்களில் அமைந்துள்ள மருத்துவ நிலையங்களிலும், வெளி நாட்டு நிபுணர்களின் சேவை இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

# மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு செயலகம் உடனடி நடவடிக்கை !

யாழ்.மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலகங்களும் - மீளக்குடியமர்வுக் கொடுப்பனவான 25,000 ரூபாவைப் பெறாத குடும்பங்களின் பெயர்ப்பட்டியலை அனுப்புமாறு - யாழ். செயலகத் திட்டமிடல் பணிப்பாளர் பு.சுந்தரம்பிள்ளை அறிவித்துள்ளார்.

மீளக்குடியமர்வுக் கொடுப்பனவைப் பெறாத சகல குடும்பங்களுக்கும், உடனடியாகக் கொடுப்பனவு வழங்கும் முகமாகவே, இப்பட்டியல்களை அனுப்பும்படி கோரப்பட்டுள்ளது.

கடந்தவாரம் யாழ். செயலகத்தில் இடம்பெற்ற சந்திப்பிலேயே, இந்த அறிவித்தல் சகல பிரதேச செயலர்களுக்கும் விடுககப்பட்டது.

### காரைநகரில் இலவச மருத்துவ முகாம்

யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத்தினரும், இலங்கை செஞ்சிலுவைச் சங்கமும் இணைந்து நடத்தும், இலவச மருத்துவமுகாம் இன்று காலை 9 மணிதொடக்கம் காரைநகர் தியாகராஜா மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பரிசோதனை முகாமில்- கண்பரிசோதனை செய்து, இலவசமாக மூக்குக்கண்ணாடி வழங்கப்படுவதுடன், நீரிழிவுப் பரிசோதனை, இரத்த அழுத்தம், பொது வைத்திய பரிசோதனையும் இடம்பெறவுள்ளது. (52)

### மீனவர்களுக்கு அபிவிருத்திக் கடன்

கொழும்புத்துறையிலுள்ள 30 மீனவ குடும்பங்களுக்கு, சுழற்சி முறைக்கடனாக, தலா 10 ஆயிரம் ரூபாப்படி 3 இலட்சம் ரூபாவை, யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் வழங்கியுள்ளது.

கொழும்புத்துறைக் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களினூடாக - ஜே/61, ஜே/62 ஆகிய கிராம அலுவலர் அலுவலகங்களில் வைத்து, இந்த நிதியுதவி மீனவக் குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. (55)

### அடையாள அட்டை கண்டெடுப்பு!

காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடைய சபாரத்தினம் சந்தானலட்சுமி என்பவருடைய தேசிய அடையாள அட்டை, விசேட அடையாள அட்டை என்பன கண்டெடுக்கப்பட்டு 'நமது ஈழநாடு' அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர் நேரில்வந்து ஆதாரங்காட்டிப் பெற்றுக்கொள்ளலாம்.

### எழுச்சிப் பேரவை உறுப்பினர்களுக்கான ஒன்றுகூடல்

தேசிய எழுச்சிப் பேரவையின் பருத்தித்துறை பிரதேச மட்டக் குழுக்கூட்டம் - இன்று பி.ப. 3 மணிக்கு, பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. இந்தக் கூட்டத்தில், ஊரகக் கிளைகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்டவர்களைக் கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (122)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

முதலாவது அகவையில்



பெயர் : அ.நியூட்டன்
முகவரி : நெடுந்திவு மத்தி, நெடுந்தீவு.

முதலாவது அகவையில்

பெயர் : உ.யதுர்சன்
முகவரி : 8, பேக்கரி லேன், யாழ்ப்பாணம்.



பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:--------------------
முகவரி :--------------------
பிறந்த ஆண்டு:--------------------
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

--------------------
பெற்றார் ஒப்ப..


# சாதாரணதரப் பரீட்சார்த்திகள் அடையாள அட்டை பெறலாம்!

## ஒக்ரோபர் 31 இற்கு முன் விண்ணப்பிக்கவும்

(ஆழியவளை)

இந்த வருடம் டிசம்பர் மாதம் நடைபெறவுள்ள க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் - தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு, எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 31 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு, ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் விஜய ரணசிங்க தெரிவித்துள்ளார்.

16 வயதினைப் பூர்த்திசெய்துள்ள பாடசாலை மாணவர்கள்- தேசிய அடையாள அட்டையைப் பெறமுடியும். திணைக்கள அதிகாரிகள் பாடசாலைகளுக்குச் சென்று, அடையாள அட்டைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தத் திட்டம், பாடசாலை அதிபர்களின் உதவியுடன் நடைமுறைப் படுத்தப்படவுள்ளது. (122)





மாமுனை அ.த.க. வித்தியாலயத்தில் - கல்வி கற்று வீரச்சாவடைந்த மாவீரர்களின் பெயர்ப்பலகையை, வடமராட்சிக் கிழக்கு கல்விக் கழகப் பொறுப்பாளர் தாயகன் திரைநீக்கம் செய்வதையும், இந்த நிகழ்வில் தேசியக் கொடியை கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு மக்கள் தொடர்பாளர் யாழ் மன்னன் ஏற்றிவைப்பதையும் படங்களில் காணலாம். (109)

# மந்திகையில் தொடர்கிறது வைத்தியர் பற்றாக்குறை!

(ஆழியவளை)

பருத்தித்துறை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில், போதிய வைத்திய நிபுணர்கள் இல்லாமையினால் - நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆறுமாத காலமாக மேற்படி வைத்தியசாலையில், மயக்க மருந்து ஊட்டும் நிபுணர்கள் மற்றும் எக்ஸ்ரே படப்பிடிப்பாளர்கள் இல்லாமையினால், நோயாளர்கள் - யாழ்.போதனா வைத்தியசாலைக்குச் செல்லவேண்டியநிலை ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக - இந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த நோயாளர்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கி வருவதாக, வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (122)

# முந்திச்செல்லும் போட்டி தந்த வினை; காவலரணுக்குள் புகுந்தது பேருந்து!

(பண்டத்தரிப்பு)

காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்துகொண்டிருந்த போக்குவரத்துச்சபைக்குச் சொந்தமான பயணிகள் பேருந்து - கூழாவடி இராணுவமுகாம் காவலரணுக்குள் பாய்ந்தது.

இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது -

காரைநகரிலிருந்து யாழ்.நோக்கி வந்துகொண்டிருந்த தனியார் பயணிகள் வான் ஒன்றும், பயணிகள் பேருந்து ஒன்றும் - ஒன்றையொன்று முந்திச் செல்லக் கலைபட்டுக் கொண்டு வந்தன.

குறிப்பிட்ட காவலரண் பகுதியில், தனியார் வான் - பயணிகளை இறக்குவதற்காகத் திடீரென நிறுத்தியபோது, பின்னால்வந்த பேருந்து வண்டியின் சாரதி, செய்வதறியாது அந்தக் குறுகிய இடைவெளியினூடாகப் பேருந்தைக் காப்பாற்றும் பொருட்டு, விலத்திச் செல்வதற்கு முற்பட்டவேளை -அருகிலிருந்த காவலரணுடன் பேருந்து மோதியது.

எனினும் - இதனால் உயிர்ச் சேதங்களோ, காயங்களோ எவருக்கும் ஏற்படவில்லை. பேருந்தின் முன்பகுதி மட்டும் சிறுசேதத்துக்குள்ளானது. (43)

# எழுச்சி பற்றிக் கூறுகிறார்கள்

## விளையாட்டு அரங்கம்

**தொடர்ந்து இரண்டு தடவைகள் மானிப்பாய் இந்துக் கல்லூரியின் 16 வயதுக்குட்பட்ட துடுப்பாட்ட அணியினர் - யாழ்.மாவட்ட சுற்றுப்போட்டியில் சாம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். இதுபற்றி அக்கல்லூரி துடுப்பாட்ட பயிற்சி ஆசிரியர் அ.உதயன் அவர்களுடனும், 16 வயதுக்குட்பட்ட அணியின் தலைவர் செல்வன் கு.கணேஷானந் மற்றும் சிறந்த வீரர்களான செல்வன்கள் யோ.பார்த்தீபன், சி.வினோத் ஆகியோருடனுமான சந்திப்பு இது.**

*கடந்த இரண்டு வருடங்களாக கல்லூரியில் துடுப்பாட்டப் பயிற்சியாளராகப் பணிபுரியும் சு.உதயன் அவர்களின் நேரடி வழிகாட்டலில் அணியானது பலதிறமைகளை, வெற்றிகளைப் பெற்றுக்கொண்ட காரணத்தால், அவரிடம் முதலில் சில கேள்விகளைத் தொடுத்தோம்.*



சு.உதயன்

**நீங்கள் இங்கே பயிற்சியாளராக வரமுன் என்ன செய்தீர்கள்?**

நான் யாழ்.பல்கலைக்கழகத்தில் கலைத்துறையில் பயின்று, பட்டதாரி ஆசிரியர் நியமனம் பெற்று, முதலாவதாக மானிப்பாய் இந்துக் கல்லூரிக்கு வந்தேன்.

**மாணவர்கள் போட்டிகளில் திறமையாகப் பங்குபற்ற நீங்கள் கைக்கொள்ளும் உபாயம் என்ன?**

ஒவ்வொரு வீரனின் மனத்திலும் சாம்பியன் கிண்ணத்தைப் பெறவேண்டும் என்ற குறிக்கோளை. அடிக்கடி ஞாபகப்படுத்திப் பயிற்சியில் ஈடுபடுத்துவேன். அதேபோல், பயிற்சிக்காலத்தில் மாணவர் மனதிலும் சாம்பியன் கிண்ணம் பெறவேண்டுமென்ற அவா காணப்பட்டது.

**இந்த அவா ஏற்படக் காரணம் என்ன?**

சாதிக்கவேண்டும் என்ற திடசங்கற்பம் தான். தொடர்ச்சியாகப் பல போட்டிகளில் தோல்வியடைந்த நிலையில், ஏன் எங்களால் வெற்றிபெற முடியாது என்ற ஆதங்கமே அவாவிற்கான காரணமாகும்.

**இதற்கு முன்பிருந்த விளையாட்டுக் குழுக்கள் வெற்றிபெறாததற்கும், நீங்கள் வெற்றியடைவதற்கும் என்ன காரணம் உண்டு?**

குழுக்கள் சிறந்தவையாக இருந்த போதிலும், அவற்றின் ஆர்வம் போதாமையே தோல்விக்கான காரணமாகும்.


**உங்கள் வெற்றிக்கு வேறு எவ்விதம் உதவிகள் கிடைக்கின்றன?**

குறிப்பாக, மானிப்பாய் பரிஷ் விளையாட்டுக் கழகத்தினரின் ஒத்துழைப்பு மிக முக்கியமானது. பெறுமதிமிக்க விளையாட்டு உபகரணங்களை எமக்குக் கொடுத்து உதவிபுரிகின்றனர். அத்துடன், பாஸ்கரன், வீரசிங்கம், M.R.மோகன் போன்றோரின் ஆலோசனையும், விளையாட்டுப் பொறுப்பாசிரியர் ரி.ரமேஷ், எஸ்.சுபாஸ்கரன், ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியர் ரி.ஜெபமணி, பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்களும் அவ்வப்போது வேண்டிய அறிவுரைகளும், உதவிகளும் புரிந்து உற்சாகமளிக்கின்றனர்.

**உங்களின் குறிக்கோள் யாது?**

சகல மாணவ வீரர்களையும், அவர்களின் திறமைகளை வெளிப்படுத்தி அனைத்துப் போட்டியிலும் வெற்றிக் கிண்ணங்களைப் பெறவைப்பதே எனது விருப்பமாகும்.

*16 வயதுக்குட்பட்ட அணித்தலைவர் செல்வன் குலேந்திரன் கணேஷானந்திடம் உரையாடிய போது -*



கு.கணேஷானந்

**ஆரம்பக் கல்வியை எங்கே கற்றீர்கள்?**

மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் கல்லூரியிலும், பின்னர் ஆண்டு 6 இலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் பயில்கிறேன்.

**துடுப்பாட்டத்தில் உங்களுக்கு எவ்வாறு நாட்டம் ஏற்பட்டது?**

தொலைக்காட்சியில் கிரிக்கெட்டை நன்கு ரசித்துப் பார்ப்பேன். அதிலிருந்தே நாட்டம் ஏற்பட்டது.


**இந்த விளையாட்டில் உங்களுக்கு உதவி புரிந்து, ஊக்கம் தந்தவர் யார்?**

எனது சகோதரர்களும், பாடசாலை ஆசிரியர் சு.உதயனும்.

**உங்கள் எதிர்கால விருப்பம் எவ்வாறுள்ளது?**

நான் படிக்கும்போதும் அதன் பின்னரும் மானிப்பாய் இந்துக் கல்லூரியில், சகல விளையாட்டுத் துறைகளிலும் வெற்றிபெற உழைப்பதே எனது விருப்பம்.

*அடுத்து, பல வெற்றிகளைக் குவித்த 16 வயதுக்குட்பட்ட அணியின் யோகராசா பார்த்தீபனிடம் சில கேள்விகள் -*



யோ.பார்த்தீபன்

**நீங்கள் ஆரம்பக்கல்வியை எங்கே கற்றீர்கள்?**

தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியிலும், பின்னர் மானிப்பாய் இந்துவிலும் கல்வியைத் தொடர்கிறேன்.

**உங்களை விளையாட்டுக்கு ஊக்குவிப்போர் யார்?**

ஆசிரியர்களும், எனது பெற்றோரும் அதிக ஊக்கம் தருகின்றனர்.

**துடுப்பாட்டத்தில் ஏதாவது சாதனைகளைப் புரிந்துள்ளீர்களா?**


ஆம். நிறைய உண்டு. 2002 ஆம் ஆண்டு 15 வயதுக்குட்பட்ட அணித்தலைவராக இருந்த போது, யாழ்.மாவட்ட சுற்றுப்போட்டியில் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், சிறந்த பந்து வீச்சாளராகவும் தெரிவுசெய்யப்பட்டேன். இதுவரை 6 தடவைகள் அரைச்சதங்களையும், அதிகூடிய ஓட்டமாகத் தெல்லிப்பளை யூனியன் கல்லூரியுடன் நடந்தபோட்டியில் 122 ஓட்டங்களைப் பெற்று, சதம் அடித்துள்ளேன். இதுமட்டுமல்ல, கடந்தவருடம் 15 வயதுக்குட்பட்ட பிரிவில் அகில இலங்கைரீதியாகத் துடுப்பாட்டப் பயிற்சிக்குத் தெரிவுசெய்யப்பட்டு, கொழும்பு N.C.C விளையாட்டு மைதானத்தில் பயிற்சியும் பெற்றுள்ளேன்.

**உங்கள் குறிக்கோள் பற்றிக் கூறுவீர்களா?**

யாழ்.மாவட்டத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரனாக வரவேண்டும் என்பதே எனது எதிர்கால இலட்சியமாகும்.

*துடுப்பாட்டத்தில் முன்னணி வகிக்கும் சிவசுப்பிரமணியம் வினோத் கூறுகையில்-*

நான் எனது ஆரம்பக்கல்வியை - நவாலி



சு.வினோத்

விவேகானந்தா வித்தியாலயத்திலும், 6 ஆம் வகுப்பிலிருந்து மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும் கல்வியைத் தொடர்ந்தேன்.

சிறுவயதுமுதல் கிரிக்கெட்டில் மிகுந்த ஆர்வம் உண்டு. மைதானத்திலே, எனது பொழுதுபோக்கு நேரத்தில் விளையாடும் போது, அத்திறமையைக் கண்ட பயிற்றுநர் - என்னைக் கிரிக்கெட் அணியில் இணைத்துக்கொண்டார். எனது சகோதரரின் ஒத்துழைப்பும், நண்பர்களின் ஊக்குவிப்புமே என்னை விளையாட்டுத்துறையில் முன்னேற வைத்துள்ளது.

கடந்த ஆண்டு உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் பாடசாலையுடன் நடைபெற்ற போட்டியில், 127 ஓட்டம் பெற்றுச் சதம் அடித்தேன். அதன்பின், இந்த வருடம் வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூயுடன் நடைபெற்ற சினேகபூர்வத் துடுப்பாட்டத்தில்- 166 ஓட்டங்களைப்பெற்று, இரண்டாவது தடவையாக சதம் அடித்துள்ளேன். எங்கள் பாடசாலையில் தனிநபர் ஒருவர் பெற்ற ஆகக்கூடிய ஓட்டசாதனை இதுவாகும். இவற்றைவிட, கொக்குவில் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம் கனகரத்தினம் (ஸ்ரான்லி) மகா வித்தியாலயத்துடன் விளையாடி அரைச்சதம் அடித்துள்ளேன். இறுதியாக நடைபெற்ற யாழ்.மாவட்டச் சுற்றுப்போட்டியின் இறுதி ஆட்டத்தில் சிறந்த துடுப்பாட்டவீரன் என்றும், ஆட்டநாயகன் என்ற விருதுகளையும் பெற்றுள்ளேன். எதிர்காலத்தில் சிறந்த துடுப்பாட்ட வீரனாகவும், பயிற்றுவிப்பாளராகவும் வரவேண்டுமென்பதே எனது இலட்சியமாகும்.

**நேர்காணல்: சந்தானகுமாரன்.**

# காசேதான் கடவுளடா

றெனிஸ் தாரகை கிம் கிளிஜ்ரர்ஸ் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்தவர். பெல்ஜியத்தின் வரிவிதிப்பு அதிகம் என்பதால், அவுஸ்திரேலியாவில் குடியேறலாமா என்று எண்ணிக்கொண்டிருக்கிறார். அத்தோடு, அவுஸ்திரேலியாவில் அவரது காதலரான இன்னொரு றெனிஸ் ஸ்ரார் லேட்டன் ஹெவிட் இருப்பதுவும் காரணமாக இருக்கலாம். இப்போது என்னவென்றால், விம்பிள்டன் சம்பியன் றொஜர் பெடரர் சுவிஸ்சர்லாந்தைவிட்டு வேறுநாட்டில் குடியேறலாமா என்று சிந்திப்பதாக ஒரு செய்தி புறப்பட்டிருக்கிறது. இவரது நாடு தாவும் சிந்தனைக்கு இரண்டு காரணங்கள் கூறப்படுகின்றன. ஒன்று - கட்டாய இராணுவ சேவை அல்லது சிவில் பாதுகாப்பு சேவையில் கடமையாற்ற வேண்டும் என்ற அரசின் நிபந்தனை. மற்றது, அதிக வரி. இதில் என்ன வேடிக்கை என்றால், கன்ரனுக்கு கன்ரன் (CANTON) வரிவிதிப்பு வீதங்கள் மாறுபடுகின்றன அப்படியென்றால் சுவிஸின் வரிவிதிப்புக் குறைவாக இருக்கின்ற கன்ரன் ஒன்றுக்கு மாறவேண்டும். அதிலும் கன்ரனுக்குள்ளும்கூட வித்தியாசமான வரிவிதிப்பு முறைகள் உள்ளன. இப்படிக் குறைந்த வரிவிதிப்புக் கொள்கையுள்ள கன்ரனுக்கு மாறலாம் என்றால், அதற்கும் ஒரு விதியுண்டு. ஒன்றில் அவர் வெளிநாட்டவராக இருத்தல் வேண்டும் அல்லது பத்து வருடங்களுக்குமேல் வெளிநாட்டில் வாழ்ந்த சுவிஸ் பிரஜையாக இருக்கவேண்டும். எப்படிப் பார்த்தாலும் பெடரருக்குச் சிக்கல்தான். ஆனால், பெடரர் நாடுமாறப் போகின்றார் என்ற செய்தியை, அவரது தந்தை மறுத்திருக்கின்றார். பெடரர் எதிர்கொள்ளும் இரண்டு பிரச்சினைகளையும் பற்றி அதிகாரிகளுடன் பேசி முடிவெடுக்கவுள்ளதாக, அவர் கூறுகின்றார். இதேவேளை, உலகப் புகழ்பெற்ற காரோட்டப்பந்தய வீரர் ஜேர்மன் நாட்டைச் சேர்ந்த மைக்கல் சூமேக்கர், வரிகள் குறைந்த சுவிஸ் நாட்டின் ஒரு கன்ரனில் வாழ்கிறார் என்பதும் ஒரு செய்தி.



றொஜர் பெடரர் - ஓடித்தப்ப வேண்டும்

றெனிஸ் ஆட்டங்களின்மூலம் பெரும் சொத்துக்களைச் சேர்த்துக்கொண்ட பெடரர், விம்பிள்டன் கிண்ணம் வென்றதன்மூலம், இன்னும் பலகோடி ரூபாய்களுக்கு அதிபதியாவார். இந்நிலையில், அவரது செல்வம் வரியாக இழக்கப்படுவதை விரும்பமாட்டார் என்பது உண்மைதான். ஆனால், ஒரு தனி நபருக்காக நாட்டின் சட்டங்களைச் சுவிஸ் மாற்றுமா என்பதும் தெரியவில்லை. புகழும், பணமும் சேர்ந்து நிம்மதியைத் தொலைத்து விட்டதோ....?

**-ரோஜா**

# நல்ல தெரிவு

இலங்கை கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நியமிக்கப்பட்டிருக்கும் ஜோன் டைசன் அவர்களிடம், கட்டுநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில் வைத்து எடுக்கப்பட்ட செவ்வியின் தமிழாக்கம் இது.



ஜோன்டைசன் மனைவி கேய் அனெட்டுடன் - நினைத்தது கிடைத்த சிரிப்பு

1981 ஆம் ஆண்டு, அவுஸ்திரேலிய அணியின் அணித்தலைவர் கிம் கியூஸ்ஸுடைய தலைமையின்கீழ், இலங்கைக்கு எதிராக ஆடியவர் ஜோன் டைசன். அப்போது இலங்கை அணியினரின் கிரிக்கெட் ஆட்டத்தில் ஒரு வகையான கவர்ச்சியிருந்ததைத் தான் கண்டதாகக் கூறுகின்றார். அதே நாட்டு அணிக்குத்தான் பயிற்றுநராகப் பொறுப்பேற்றது தனக்குக் கிடைத்த பாக்கியம் என்றும், இவர் கூறுகின்றார்.


சில தினங்களுக்குமுன், சிட்னியில் வைத்து ACB இனால் கௌரவிக்கப்பட்ட மிகச்சிறந்த கிரிக்கெட் வீரர்களுள் இவரும் ஒருவர். இவர் 1954 ஆம் ஆண்டு 11 ஆம் திகதி ஜூன் மாதம் கொக்ரா, சிட்னி நகரில் பிறந்தவர். 30 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 1,359 ஓட்டங்களையும், 29 ஒருநாள் போட்டிகளில் விளையாடி, 755 ஓட்டங்களையும் பெற்றார். ஒரு வலதுகைத் துடுப்பாட்டக்காரராகிய இவர், 1977/ 1978 இலிருந்து 1982/ 1983 வரை அவுஸ்திரேலிய அணிக்காக ஆடியவர். முதற்தரப் போட்டிகளில் ஆயிரக்கணக்கான ஓட்டங்களைக் குவித்தவர். டைசன் இதற்கு முதல் 'நியூ சவுத் வேல்ஸ்' என்ற அணிக்குப் பயிற்றுநராக இருந்தவர். இவர் இலங்கை அணியைப் பற்றிக் கூறுகையில், "பையன்களுடைய கடின உழைப்பு, தியாகம், வெறிகொண்ட ஆட்டம் ஆகியன பிடித்திருக்கிறது" என்கின்றார்.

மேற்கிந்தியத் தீவுகளுடனான இலங்கை அணியின் வெற்றி, உண்மையான உழைப்புக்குக் கிடைத்த வெற்றி எனவும் கூறுகின்றார். டைசன் 'நியூ சவுத் வேல்ஸ்' அணியின் ஆயுட்கால உறுப்பினராகவுள்ளார். இவர் - 94 போட்டிகளில் ஆடி 6,773 ஓட்டங்களையும் பெற்றவர். ஓட்டச்சராசரி 44.27 ஆகும். இவர் அவுஸ்திரேலிய தரம் 11 பயிற்றுநராகத் திகழ்கின்றார்.

இவர், கிரிக்கெட் பயிற்சி பற்றிய பல நுணுக்கங்களைக் கற்றுத்தேர்ந்தவர். அத்துடன், உடல்வலிமை பற்றிய விடயத்தில் அதிவிசேட முதுமாணிப் பட்டம் பெற்றவர். இவர் ஒரு சிறந்த உளவியல் நிபுணர். சுருங்கச் சொன்னால், இலங்கை அணிக்கு ஒரு சகலகலா பயிற்றுநர் கிடைத்திருக்கின்றார் என்றே சொல்லலாம். இவருடைய பயிற்றுவிப்புத் திறமையை, நாங்கள் வருகின்ற நவம்பர் மாதம் நடைபெற இருக்கின்ற இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் காணலாம். டேவ் வட்மோருக்குப் பின்புவரும் டைசன் தாக்குப் பிடிப்பாரா? WELCOME DYSON

**- பஞ்சநாதன் சுதர்சன்.**

# பங்களாதேஷின் எழுச்சி



எப்போதுமே Bold...!

பங்களாதேஷ் அணியின் **Test** அந்தஸ்தைப் பறிக்க வேண்டும் என்று, அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளரான ரெனிஸ் லில்லி கூறியுள்ளார். இவரின் இந்தக்கூற்று நிச்சயமாக வழிமொழியப்பட வேண்டிய ஒன்றாகும்.

இன்று உலக அணிகளில் பங்களாதேஷ் அணி மிகவும் விமர்சிக்கப்படும் அணியாகத் திகழ்ந்து வருகின்றது. பத்து வருடங்களுக்கு மேலான அனுபவத்தைக் கொண்டிருந்த இந்த அணி, இன்னும் திணறியபடியே உள்ளதென்பது வேடிக்கை. இன்னும் சொல்லப்போனால், தாம் விளையாடிய ஒருநாள் போட்டிகளில் 95 வீதத்துக்கும் மேலான போட்டிகளில இந்த அணி தோல்வியையே தழுவிக்கொண்டுள்ளது. அத்துடன், டெஸ்ட் ஆட்டங்கள் அத்தனையிலும் படுதோல்விகளைத்தான் சந்தித்துள்ளது. இந்தநிலை பார்வையாளர்களுக்கு மாத்திரமன்றி, எதிரணி வீரர்களுக்கும் வெறுப்பையும், சலிப்பையும்தான் ஏற்படுத்துகிறது. இத்தனைக்கும் அப்பட்டமான உதாரணமாக - அண்மையில் நடந்து முடிந்த **world Cup** ஐ எடுத்துக்கொள்ளலாம். தாம் விளையாடிய அத்தனை ஆட்டங்களிலும் தோல்விகளைச் சந்தித்ததோடு - 59, 75, 150... இப்படியான குறைவான மொத்த ஓட்டங்களைப் பெற்று, கௌரவமிழந்து நின்றது என்பது வெளிப்படை.

இந்த அணிக்குப் பின்னால் வந்த கென்யா, நெதர்லாந்து மற்றும் கனடா போன்ற அணிகள்கூட, ஏதோவொரு விதத்தில சிறப்பாக ஆடியுள்ளதைக் கண்டுள்ளோம்.

ரெனிஸ் லில்லி இன்னுமொரு விடயத்தினைத் தெளிவாகவும், வெளிப்படையாகவும் கூறியுள்ளார். "இப்படிப்பட்ட அணிகளை விளையாட அனுமதிக்கும்போது - எதிரணிப் பந்துவீச்சாளர்கள் (பலம்வாய்ந்த அணிகள்) மிக இலகுவாக விக்கெட்டுக்களை வீழ்த்தி, **Record** அடிக்க வாய்ப்பைக் கொடுக்கிறார்கள்" என்பதே அவரின் கூற்றாகும். இதுவும் நிச்சயமாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய உண்மையாகும். சாதனை என்பது - கடினமான பல தடைகளையும் தாண்டிப் படைக்கின்ற விடயமாகும். அதைவிடுத்து இப்படிப்பட்ட பலமற்ற அணிகளைச் சந்தித்து, மிக இலகுவாக அவர்களைச் செத்தபாம்பை அடிப்பதுபோல, அடித்து, வென்று படைக்கும் சாதனையும் ஒரு சாதனையா...?

ஆனால், பங்களாதேஷ் அணியில் விளையாடும் வீரர்கள் முற்றிலும் திறமையற்றவர்கள் என்று கருதப்படமுடியாது. காரணம் - அவர்களிலும் பல இளம் அதிரடி ஆட்டக்காரர்கள், சிறந்த வேகப் பந்துவீச்சாளர்கள், களத்தடுப்பாளர்கள் இருக்கின்றார்கள். அண்மையில் நடந்த ஆட்டங்களில், இவர்களில் கணிசமான அளவு திறமைகளை மதிக்கக்கூடியதாக இருந்தது. அப்படியானால், தோல்விகளுக்குக் காரணம்தான் என்ன?

அனுபவ முதிர்ச்சியுள்ள வீரர்கள், ஆளுமையுள்ள அணித்தலைவன், சிறந்த பயிற்றுவிப்பாளர், உளவியல் நிபுணர் ஆகியவர்களுடன் கடினமான பயிற்றி, விடாமுயற்சி இவையெல்லாம் பங்களாதேஷ் அணியின் எதிர்கால எழுச்சிக்கு வழிகோலும்.

இருந்தாலும், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் டெஸ்ட் போட்டியில், பங்களாதேஷ் 97 ஓட்டங்களுக்குச் சகல

# வட்மோரின் கையில்

விக்கெட்டுக்களையும் இழந்துவிட்டது. அவுஸ்திரேலியா ஐந்து விக்கெட் இழப்பிற்கு 244 ஓட்டங்களுடன் ஆடிக்கொண்டிருக்கிறது. இந்நிலையில், பங்களாதேஷின் இன்னொரு தோல்வி நிச்சயமாகிறது. இப்பொழுதுள்ள வினா - எத்தனை நாளில் டெஸ்ட் ஆட்டம் முடியுமென்பதுதான். என்றாலும் டேவ் வட்மோரின் அதீததிறமை, பங்களாதேஷ் அணியில் ஏதோ ஒருவகையில் நல்ல மாற்றத்தைத்தரும் என்று நம்பலாம்.

**- வீ.ஏ.கோவி.**

# விளையாட்டுக்குச் சொல்லவில்லை, உண்மை!





இந்தத் தர்த்துக்கு உயரவேண்டும்.

இலங்கைத் தடகள வீரர்கள் தம் திறமையைக் காட்ட, உயரிய சந்தர்ப்பம் ஜுலை 25, 26, 27 இல் கிடைக்கப்போகிறது. தேசிய விளையாட்டுகள் (**NATIONAL CHAMPIONSHIPS**), சுகததாஸ விளையாட்டு அரங்கில் இந்தத் திகதிகளில் நடைபெறும்போது, திறமைவாய்ந்தவர்கள் மனப்பூரிப்புடன் மட்டும் வீடு செல்லப்போவதில்லை. கூடவே பணப்பொதிகளுடனும் செல்லப்போகிறார்கள். இந்த மெச்சத்தக்க காரியத்துக்காக மிகப்பெருங் குரலில் பாராட்டப்பட வேண்டியவர் இலங்கைத் தடகளச் சங்கத்தின் (**SRI LANKA ATHLETIC ASSOCIATION**) தலைவர் சுனில் ஜயவீர அவர்கள்தான். அப்படி இவர் என்னதான் புதிதாக அறிமுகப்படுத்திவிட்டார் என்றொரு கேள்வி எழுவது இயற்கையே. இவரது கருத்துப்படி தம் கழகமானது தடகள வீரர்களையும், பயிற்றுநர்களையும், அவர்கள் வினையாற்றல் திறமைகளின் பெறுபேற்றின் அடிப்படையில், அடுத்துவரும் வருடத்துக்கு நிதியுதவிகள் செய்யப்போகிறது. அது எந்தளவிலான உதவியாக இருக்கும்?



சுனில் ஜயவீர - இதோ ஒரு கதாநாயகன்

நடைபெறப்போகும் 35 நிகழ்வுகளிலும் - முதன் மூன்று இடங்களையும் பெறப்போகும் வீரர்களுக்கு ஐந்தாயிரம், மூவாயிரம், இரண்டாயிரம் ரூபாய் என்றவாறு பரிசுப் பணம் வழங்கப்படும். ஒரு ஆசிய சாதனை முறியடிக்கப்படுமாயின், வீரர் பெறப்போகும் பரிசுத்தொகை ஐம்பதாயிரம் ரூபா. இதே தொகையை அனுசரணையாளர்களும் வழங்குவார்கள். எனவே, வீரர் பெறப்போகும் பரிசு ஒரு இலட்சம் ரூபா. ஒரு வீரர் ஆசியத் தரத்தில் இருபது பேருக்குள் ஒருவராக வருவாராயின், அவருக்கு இருபதாயிரம் ரூபா பரிசு. தேசிய அளவில் சாதனை புரிந்தால், ரூபா இருபத்தையாயிரம். மேலும், சாதனையாளரின் பயிற்றுநருக்கு ரூபா பத்தாயிரம்.

தடகளப் போட்டிகளைத் தொழில்சார்ரீதியில் நெறிப்படுத்திச் செல்லவும், தேசிய அளவுக்கப்பால் சென்று உற்சாகத்தைக் கொடுக்கவும், இந்த ஊக்குவிப்புகள் உதவும் என்கிறார் சுனில் ஜயவீர. தொடர்ந்து அவர் தன் திட்டங்கள் பற்றி விபரிக்கையில், சர்வதேச அளவுகோல்களின் அடிப்படையில் 1050 புள்ளிகள் பெறுபவர் - மாதாந்தம் ரூபா பத்தாயிரப்படி, ஒரு வருடத்துக்குக் கொடுப்பனவுகள் பெற்றுக்கொள்வார். 1000 -1050 புள்ளிகளுக்கிடையில் அடங்கும் வீரர்கள் (**LEVEL TWO**), ரூபா ஐயாயிரப்படி பெற்றுக்கொள்வார்கள். 950-1000 புள்ளிச் சட்டகத்துள் அடங்கும் வீரரும், 850 புள்ளிகளுக்கு மேல் பெறும் கனிஷ்ட தடகள வீரரும் - ரூபா இரண்டாயிரப்படி பெற்றுக்கொள்வார்கள். இதை விடப் புதிதாக அறிமுகப்படுத்தப்படவிருக்கும் கிரீடா திரிய (**KREEDA DIRIYA**) திட்டத்தின்கீழ், ஐந்நூறு தடகள வீரர்கள் மாதாந்தம் 500 ரூபா பெறுவார்கள். இதேவேளை, பயிற்றுநர்களுக்கும் ஒரு விட்டமின் ஊசி போடுகிறார் சுனில் ஜயவீர. தேசிய நிலைப் பயிற்சியாளர் பெறப்போவது மாதாந்தம் ரூபா பதினைந்தாயிரம். அடுத்தகட்டப் பயிற்றுநர்கள் ரூபா ஐயாயிரம் மற்றும் ரூபா ஆயிரப்படி ஊக்குவிப்புப் பெற்றுக்கொள்வார்கள். இந்தக் கொடுப்பனவுகள் மாதாந்தச் சம்பளமல்ல. பயிற்றுநர்களின் செயற்பாட்டின் மதிப்பீட்டின் அடிப்படையிலேயே இதனைப் பெற்றுக்கொள்ளமுடியும். (போச்சுடா!!).

தடகளம் சார்ந்த எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சியையும், தன்னம்பிக்கையையும், தாம் சார்ந்ததுறை வாழ்வழிக்கும் என்ற நம்பிக்கையையும் கொடுக்கும். மிகத் துணிச்சலான திட்டங்களைச் சுனில் ஜயவீர முன்வைத்திருக்கிறார். இவை எல்லாவற்றுக்கும் பல மில்லியன்கள் பணம் தேவைப்படும் நிலையில், அந்தப் புண்ணியத்தை அல்லது அனுசரணையைச் செய்யப் போகிறவர்கள் அரசு சார்பு நிறுவனமான லங்கா சிமென்ட் கொம்பனியினராவார்கள். இந்தத் திட்டத்துக்கு மாதாந்தம் ஒரு மில்லியன் ரூபாவீதம் - ஒரு வருடத்துக்குப் பன்னிரெண்டு மில்லியன் ரூபாய்கள் தேவைப்படும். இதற்கு அனுசரணையாளர்களின் கணிசமான பங்களிப்பும், இருக்கும். இதனைவிடவும், வேறுவகையிலும் நிதி சேகரிக்க சுனில் ஜயவீர திட்டங்கள் வகுத்திருக்கிறார். அது பொதுமக்கள் வாங்குகின்ற சிறுதொகைக்கான ஒரு ரிக்கெட்டாகக்கூட இருக்கலாம். இருந்தாலும், இவருடன் மறக்காமல் பாராட்டப்படவேண்டிய இன்னொருவர், லங்கா சிமென்ட் கொம்பனியின் தலைவர் அனில் கொஸ்வத்த. இவருடைய கருத்துக்கள்- தடகளப் போட்டிகளின் பரிதாபநிலையை நன்குணர்ந்த ஒருவரின் குரலாக வெளிவருகின்றது. இந்தநிலையில், இலங்கையின் தடகளப் போட்டிகள் தொடர்பில் பளீரென்று ஒரு வெளிச்சம் பரவுவதைத் தெளிவாகக் காணமுடிகின்றது. இந்தத் திட்டங்கள் பவிசுக்காக முன்வைக்கப்பட்டவையல்ல என்பதும் தெரிகிறது. மேலும், நீண்டகால நோக்கில 2005 இல் தென்னாசியப் போட்டிகள், 2006 இல் டோகாவில் நடைபெறவிருக்கும் ஆசியத் தடகளப் போட்டிகள் மற்றும் 2008 இல் நடைபெறப்போகும் பீக்கிங் (சைனா) ஒலிம்பிக் என்பவற்றை மனதிற்கொண்டே, இந்தத் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகிறது. நம்பிக்கையோடு முன்செல்கிறார்கள் சம்பந்தப்பட்டோர். நிச்சயம் பலன் கிடைக்கும்!

**-ஜோசப் கிருஷ்ணா**

# விளையாட்டில் இத்தனை விந்தைகளா



செப் பிளெட்டர் - இப்படியெல்லாம் விடயம் இருக்குத் தெரியுமா?

உலக உதைபந்தாட்டச் சம்மேளனமான **FIFA** இன் தலைவர் செப் பிளெட்டரிடம், 2003 ஆம் ஆண்டின் இறுதிக் காலப்பகுதியில் எதனைச் சாதிக்க எண்ணியுள்ளீர்கள் என்று கேட்டபோது, ஒரு பல்தேசியக் கொம்பனியின் தலைவர் பதிலளிப்பதுபோலப் பதிலளித்துள்ளார். உதைபந்தாட்டம் உலகெங்கும் இன்னும் பிரபல்யப்படுத்தப்பட வேண்டியமை, எல்லோரதும் ஒத்துழைப்பின் அவசியம் என்றவாறு கூறிச் செல்பவர், உதைபந்தாட்டத்துறையில் முகாமைத்துவம் என்று ஒரு விடயம் பற்றிப் பேசுகிறார். தறபோது இந்தத் துறைசார்ந்தோர், உதைபந்தாட்ட உலகில் முக்கியமான இடமொன்றை வகிக்க ஆரம்பித்துள்ளார்கள் என்கிறார் பிளெட்டர். சர்வதேசரீதியான முகாமைத்துவம், விளையாட்டுத்துறை சார்ந்த சட்டங்கள் மற்றும் மானிடவியல் துறைகளில் 2000 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தற்போது இந்தத் துறைகளில் பட்டப்பின் படிப்பை முடித்துக்கொண்டு வெளியேறியிருக்கும், உதைபந்தாட்ட உலகைச் சார்ந்த முப்பது பேர் பற்றியே இவர் இப்படிக் குறிப்பிடுகின்றார்.

இந்தப் பட்டப்பின் கற்கைநெறிகளை நடாத்துபவன்- இங்கிலாந்தின் லீஸ்ரரில் அமைந்துள்ள டெமொன்ஸ்போட் பல்கலைக்கழகம், இத்தாலியின் மிலானில் அமைந்துள்ள **SDA** பொக்கோனி முகாமைத்துவ நிறுவனம் மற்றும் சுவிற்சர்லாந்தில் அமைந்துள்ள நியூசட்டல் பல்கலைக்கழகம். இந்தப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டவர்கள், உலகின் அத்தனை பிராந்தியங்களிலிருந்தும், தெரிவுசெய்யப்பட்ட முப்பது பேராவர். இவர்கள் தற்போது கழகங்கள், விளையாட்டுத்துறை நிறுவனங்கள், உதைபந்தாட்ட உயர் நிறுவனம் **FIFA** போன்றவற்றில் கடமையாற்றுகிறார்கள். ஒரு வரையறைக்குட்பட்ட கல்விநிலை இன்றைய சவால்களை எதிர்கொள்ளப் போதாததாக இருக்கிறது. நவீன உலகின் சவால்கள் அளப்பரியன. அவற்றுக்கு முகங்கொடுப்பது மட்டுமல்லாது, அதனைக் கடந்து, உலக உதைபந்தாட்டத்தை முன்னெடுத்துச் செல்லவேண்டியுள்ளது. எனவே, நவீன கற்கைநெறிகள் உயர் தொழில்நுட்பத்திறன்கள் பற்றிய அறிவு என்பன அவசியம். இதனாலேயே பிளெட்டர் விளையாட்டுத்துறையில் - முதுமாணிப் பட்டங்கள், கலாநிதிப் பட்டங்கள் பற்றிப் பேசுகின்றார்.

இந்த விடயங்களைப் பார்க்கும்போது, உலக உதைபந்தாட்டத்தில், இலங்கையின் தரம் மற்றும் இலங்கையிலிருந்து இத்தகைய பட்டப் படிப்புகள் போன்றவற்றுக்குத் தெரிவுசெய்யப்படுதலுக்கான தரம் என்பன எந்தளவிலுள்ளன என்பது தெரியவில்லை. ஆனால், உதைபந்தாட்ட உலகில் **FIFA** ஐ நெருங்க வேண்டுமாயின், மிக வேகமாக முன்னோக்கிய பாய்ச்சல் தேவை என்பது மட்டும் தெளிவாகிறது.

ஆனால், இதற்கான முயற்சிகள் அரச மட்டத்தில் செய்யப்படுவதுடன், சகல வளங்களும் வழங்கப்படவும் வேண்டும். அதோடு பிராந்தியரீதியாகத் திட்டங்கள் பரவலாக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். மேலும், அவை சரியாக நடைபெறுவதை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். நிதி மற்றும் நிர்வாகச் செயற்பாடுகள் இறுக்கமான சட்டதிட்டங்களுக்குக் கீழ்கொண்டு வரப்படவேண்டும். இலங்கையின் விளையாட்டுத்துறையில் இன்று பூஞ்சனமாகப் பீடித்திருக்கும் சிவப்பு நாடா மற்றும் வவுச்சர் கலாசாரம் போன்றன நீங்கவேண்டும். தற்போதுள்ள நிறுவனரீதியான அமைப்புகள் இரக்கமில்லாமல், புத்தாக்கம் செய்யப்படவேண்டும். அப்படியாயின், எதிர்காலத்தில் **FIFA** உடன், ஏதாவது கதைக்கக்கூடிய தகுதியை - இலங்கை உதைபந்தாட்டம் பெறும். இல்லாவிட்டால், இன்னும் ஐம்பது வருடங்களுக்குத் தென்னாசியப் பிராந்தியத்துக்குள் (ஏழு நாடுகள் மட்டும்) 'குண்டாஞ்சட்டிக்குள் குதிரை ஓட்டிக்கொண்டிருக்க வேண்டியதுதான்.' ஏனெனில், ஆசியாவின் ஏனைய பிராந்திய நாடுகள் பல - (சீனா, ஜப்பான், தென்கொரியா, சவூதி அரேபியா போன்றன) உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டிகளில் பங்குகொள்கின்றன.

**- சரண்யா.**

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**
மலர்கள் நிறைந்த தோட்டங்களில் நடப்பதைவிட சின்னஞ்சிறுவர்களின் அரவணைப்பில் சுகம் அதிகம்.
- றோபேர்ட்

# நமது நோக்கு

## கொஞ்சம் இறங்கி வாருங்கள்!

மேற்குநாடுகளில் ஒளிபரப்பப்படும் தமிழ்த் தொலைக் காட்சியொன்று அண்மையில் யாழ்.நகரில், சிறுவர் நிகழ்ச்சிகளுக்கான ஒளிப்பதிவை மேற்கொண்டபோது பங்குபற்றிய சிறார்களின் திறன்வெளிப்பாடு - நிகழ்ச்சி ஒழுங்கமைப்பாளர்களதும், பார்வையாளர்களதும் கவனத்தைப் பெரிதும் ஈர்ப்பதாக அமைந்தது.

மிகுந்த நுண்ணறிவுடன் அந்தச் சிறார்கள் செயற்பட்ட விதம் - அவர்களது கல்விசார் நடவடிக்கைகளையும் கடந்து - அவர்களுக்குள்ள வகுப்பறைக் கற்றல் சாராத ஏனைய பல திறன்களையும் வெளிக்கொண்டுவந்ததைப் பார்த்தபோது -

யாழ்.குடாநாடு மட்டுமல்ல, தமிழர் தாயகம் முழுவதிலுமுள்ள சிறார்களின் வகுப்பறைக் கற்றல் கடந்த செயற்பாடுகளுக்கு ஊக்கமும், ஒத்துழைப்பும் தரவேண்டியது பற்றிய அவசியம் உணரப்பட்டது.

தனியே கற்பித்தல் - கற்றல் என்ற வழிக்குள் மட்டுமே வரையறுக்கப்பட்டவர்களாக வளர்க்கப்படும் சிறார்களுக்கு - வெளியுலக அனுபவங்களையும், கற்பித்தல் சாராத செயற்பாடுகளில் ஆர்வத்தையும் தருவதிலுள்ள குறைபாடுகள் அப்போது கண்முன் நிழலாடின.

இன்று - சிறார்களின் முழுமையான கவனம் பாடசாலைக் கல்வியோடும், அதன் பின்னர் தனியார் கல்வி நிறுவனங்களிலுமாக மட்டுப்படுத்தப்பட்டிருக்க -

அவர்களின் அறிவுத்தேடலை இந்த வரையறைகளுக்குள் தொலைத்துவிட்டதான போக்கே எங்கும் காணப்படுகின்றது.

சிறாரின் நாளாந்த வாழ்க்கை பாடசாலையோடு ஆரம்பித்து - பின்னர், மாலையில் தனியார் கல்விநிலையங்களில் தொடர்ந்து - இரவில் வீட்டுப்பாடங்களை நிறைவேற்றிக் கொள்வதான வழிமுறைக்குப் பழக்கப்பட்டுவிட்டதான நிலையில் -

அவர்களுக்குள்ள ஏனைய திறன்களை, ஆற்றல்களை வளர்க்கவும், சூழலுடன் தம்மை இயைபாக்கிக் கொள்ளவும், அழகியல் கலைகளை உணர்ந்து கொள்ளவும், பாடநூல்கள் தவிர்ந்த ஏனைய அறிவுமூலங்களை நாடவும், தம்மை இறுக்கமான புற அழுத்தங்களிலிருந்து தளர்த்திக் கொள்ளவும் வாய்ப்புக்கள் அருகியே வருகின்றன.

இந்தப்போக்கு - அட்டவணைகளுக்குள் குறுக்கப்பட்டுவிட்ட, அமுக்கப்பட்டுவிட்ட ஒரு வாழ்வைத்தான் சிறார்களுக்கு அளிக்கிறதேயன்றி - தன்னைத் திறந்து வெளிப்படுத்துகின்ற (Exposure) ஆற்றல் அவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடுகின்றது.

இது - அவர்களுடைய நாளாந்த வாழ்வில் பகிரங்கமாகத் தெரிகின்ற பாதிப்பைத் தராவிடினும் - அந்தச் சிறார்களுடைய எதிர்காலத்திலும், ஆரோக்கிய வாழ்விலும் ஆழமான வெற்றிடத்தையே ஏற்படுத்துவதை கல்வியியலாளர்களும், உளவியல் நிபுணர்களும் சுட்டிக் காட்டுகின்றனர்.

சிறுவயதினாலான இந்த நேர அட்டவணை வாழ்வு- பின்னர், இயந்திரமயமான வாழ்க்கையை எதிர்ப்பின்றியும், விமர்சனங்களின்றியும் உள்வாங்கச் செய்துவிடுவதும் ஒரு மோசமானதொரு விடயமாகும்.

பிறத்தலுக்கும் இறத்தலுக்கும் இடையிலான இந்த சுவாரசியமற்ற வாழ்வின் நோக்குப்பற்றி ஓரளவேனும் சிந்திக்கத் தலைப்படுகின்றபோது - அநேகமாக அது காலங்கடந்ததாகி விடுகின்றது.

எனவே - எமது இளைய சமுதாயத்தின் ஆரோக்கியமான வளர்ச்சி பற்றி அக்கறைப்படும் பெற்றோர்களும், கல்விச் சமூகத்தினரும், ஏனையோரும் - சிறார்களை புதிய உலகிற்குள்ளும், புதிய அனுபவங்களுக்குள்ளும் புதிய உள்வாங்கல்களுக்குள்ளும் அழைத்து வரவேண்டிய கடமையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

வகுப்பறைக் கல்விக்குள்ள முக்கியத்துவத்தைப் பாதிப்படையச் செய்யாதவகையில் - சிறார்களுக்கு சுயமான தேடலுக்கும், பகிர்வுகளுக்கும் வாய்ப்புக்கள் வழங்குவதற்கான வழிவகைகள் இனங்காணப்படவேண்டும்.

அதேவேளை, யாழ்ப்பாணத்தில் சிறாருக்கான - ஒழுங்கான சிறார் நூலகம், சிறுவர் பூங்கா போன்ற அடிப்படையான அமைப்புக்களே இல்லாத அவலத்தைப் போக்கவும் உரியவர்கள் முன்வரவேண்டும்.

வீதிக்குவீதி வேண்டாம், ஆகக்குறைந்தது கிராமத்துக்கு ஒன்று என்ற ரீதியிலாவது சிறுவர் நூலகங்களை, பூங்காக்களை ஏற்படுத்தி, ஒரு ஆரம்பத்தையேனும் உருவாக்குவதில் சம்பந்தப்பட்டவர்கள் கவனம் செலுத்துவார்களா?

இந்தச் சமூகம் வளர்ந்தோருக்கு மட்டுமானது என்ற போக்குமாறி, சிறார்களின் வளர்ச்சியிலும், நலனிலும் அக்கறைகொள்வதில் இனியாவது முயற்சிகள் துளிர்விட்டாலே-

ஆரோக்கியமான சிறுவர் சமுதாயம் பற்றிய அடுத்த கட்ட, நவீன உலகத்திற்குள் சிறார்களைக் கைபிடித்து அழைத்துச் செல்லமுடியும்.

# நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுகபோகம்;
# 600 ரூபா உணவு பதினைந்து ரூபாவிற்கே!

## வறுத்த கோழி இறைச்சியும் உள்ளடக்கம்

(கொழும்பு)

நாட்டில் பொருட்களின் விலை உயர்ந்தாலும் - நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், அங்கு பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும் வழங்கப்பட்டுவருகின்ற உணவானது, வெளியில் அறுநூறு ரூபா பெறுமதியானதாக இருந்தாலும, பதினைந்து ரூபாவிற்கே அது நாடாளுமன்றத்தில் தொடர்ந்தும் வழங்கப்பட்டுவருவதாக - நாடாளுமன்ற விவகார அமைசசு கூறுகிறது.

இந்தப் பதினைந்து ரூபா உணவில் - சோறு மற்றும் ஐந்து கறிகள் உள்ளடக்கப்படுவதாகவும்,

அதேவேளை - இதேவிலையில் ஐரோப்பிய பாணியிலான உணவும், நாடாளுமன்றச் சிற்றுண்டிச்சாலையில் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வழங்கப்படும் உணவில் - இரண்டு மீன் துண்டங்கள், அவித்த காய்கறிகள், புடிங், வட்டிலப்பம், ஐஸ்கிறீம், பழக்கூட்டு என்பனவும் உள்ளடங்குகின்றன.

இவற்றுடன், நாடாளுமன்ற உறுப்பினர்களும், பணியாளர்களும் வறுத்த கோழி இறைச்சியையும் அங்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

இதே தரமுடைய மதிய உணவு, கொழும்பு ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் அறுநூறு ரூபாவுக்குக் குறையாமல் விற்பனை செய்யப்படுவதாகவும், நாடாளுமன்றத்தில் செய்தி சேகரிக்கின்ற பத்திரிகையாளர்கூட அறுநூறு ரூபா பெறுமதியான உணவை இலவசமாகப் பெறுவதாகவும், நாடாளுமன்ற விவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை - நாடாளுமன்றத்திற்கு வருகை தருகின்ற மக்கள் - சாதாரண மதிய உணவுப் பார்சல்களை அறுபது ரூபாவிற்கே பெற்றுக்கொள்ள முடிவதாகவும் மக்கள் தரப்பிலிருந்து விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

# யாழில் புதிய செயற்திட்டங்கள்;
# ஆராய யு.எஸ்.எய்ட் அதிகாரிகள்!

## விரைவில் இங்கு வருவர்!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் புதிய செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக - 'யு.எஸ். எய்ட்' நிறுவனத்தின் அதிகாரிகள் குழுவொன்று, மிகவிரைவில் இங்கு விஜயம் செய்யவுள்ளது.

பல்வேறு செயற்திட்டங்களுக்கான திட்டவரைபுகள் ஏற்கனவே தமது கைவசம் உள்ளது என்றும், இந்தச செயற்திட்டங்களில் எவற்றை உடனடியாக நடைமுறைப்படுத்த முடியும் என்பது குறித்த உண்மை நிலையை ஆராய்வதற்கும், அந்த விடயம் தொடர்பான விபரங்களைச் சேகரித்துக் கொள்ளவுமே, மேற்படி அதிகாரிகள் குழு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளதாக, இந்த நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

யாழ். அரசாங்க அதிபர் மற்றும் குடாநாட்டில் செயற்படும் அரசசார்பற்ற நிறுவனங்களின் அதிகாரிகளையும், இந்தக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடல்களை நடத்தவுள்ளனர்.



பொலிஸாரால் மீட்கப்பட்ட ஒரு தொகுதி துவிச்சக்கர வண்டிகள், யாழ்.பொலிஸ்நிலையத்தில் இதுவரை எவரும் உரிமை கோரி மீளப்பெறாதநிலையில் உள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரங்களைச் சமர்ப்பித்து இவற்றைப் பெற்றுக் கொள்ளலாம் என்று யாழ். பொலிஸ்நிலையம் அறிவித்துள்ளது.

# ஒரே கட்டமைப்புக்குள் முஸ்லிம்கள்;
# சவாலுக்குரியது என்கிறார் ஹக்கீம்!

(கல்முனையிலிருந்து சலீம்)

யுத்தமோ, சமாதானமோ தமிழ் - முஸ்லிம் உறவில் பாதிப்புக்களில்லாத ஒரு சூழலை ஏற்படுத்துவதுதான், விடுதலைப் புலிகளுக்கு இருக்கும் பெரும் தார்மீகக் கடமை என-

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரவூப் ஹக்கீம் கூறினார்.

அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த வீரத்திடல் அல் - ஹிதாயா மகா வித்தியாலய பொன்விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் ரவூப் ஹக்கீம் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்,

இன்றைய சமாதான காலத்தில் தமிழ் - முஸ்லிம் உறவுகள் மீண்டும் சீர்செய்யப்படுகின்ற நிலைமை உருவாகியுள்ளது போல், யுத்த காலத்திலும் அது மீண்டும் சரிவைச் சந்திக்கின்ற, பாழடைகின்ற ஒரு நிலைமைக்கு வந்துவிடுவதற்கு எந்தவிதத்திலும் விடுதலைப் புலிகள் காரணமாக அமைந்துவிடக்கூடாது.

சமாதானத்தைக் கொண்டுவரவேண்டும் எனும் நோக்கில், முஸ்லிம் காங்கிரஸ் தனது அரசியலில் பலவிதமான சவால்களைச் சந்திக்கின்ற ஒருநிலைமைக்கு வந்திருக்கின்றது.



நிலத்தைப் பிரிக்காமல், முழு வட-கிழக்கிலும் வியாபித்துள்ள தங்களுடைய மேலாதிக்கத்தின் கீழான ஒரே கட்டமைப்பு வேண்டுமென்றும், அதன் கீழ் முஸ்லிம்கள் வாழ்ந்தே ஆக வேண்டும் என்றும, நிர்ப்பந்தத்தை எவரும் திணிபபதாக இருந்தால், அது சாத்தியமாகாத விடயமாகும்.

வட - கிழக்கில் ஆங்காங்கே பல இடங்களில் நாளும், பொழுதும் பாதிக்கப்பட்டுவந்துள்ள முஸ்லிம்களின் எதிர்கால வாழ்க்கையை, ஒரேகட்டமைப்புக்குள் வடிவமைத்துக் கொள்வதாகவிருந்தால், அது சவாலுக்குரிய விடயமாகும்.

தமிழ் மக்களுடைய அபிலாஷைகளுக்குக் குறுக்கே நிற்காது, முஸ்லிம்களின் அபிலாஷைகளை எப்படி அடையமுடியும் என்பது குறித்து மாற்றுத்தீர்வுகளை நாம் ஆராய்ந்து கொண்டிருக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

# திரைப்படத்துக்கு உதவி இயக்குநர்:
# ஆர்வமுள்ளோர் விண்ணப்பிக்கலாம்!

## 'ஸ்கிறிப்நெற்' வழங்குகிறது வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்தகாலங்களில் திரைக்கதை உருவாக்கல் பயிற்சிநெறியை யாழ்.பல்கலைக்கழகப் புறநிலைப் படிப்புக்கள் அலகுடன் இணைந்து நடத்திய 'ஸ்கிறிப்நெற்' நிறுவனம் - எதிர்வரும் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்களில் தென்பகுதியில் நடைபெறவிருக்கும் குறுந்திரைப்படத் தயாரிப்புக்கு, வடபகுதியிலிருந்து அதற்கான உதவி இயக்குநர்களைத் தெரிவுசெய்து வழங்க முன்வந்துள்ளது.

இப்பணியைச் செய்துகொள்வதனூடாக இயக்குநர்களுக்கான செய்முறை அனுபவங்களைப் பெற்றுக்கொள்வர். தென்பகுதியில் உருவாக்கப்படவுள்ள இக்குறும் திரைப்படங்கள்- 35 மி.மீ செலுலொய்ற் கமரா மூலம் படமாக்கப்படவுள்ளன.

ஏற்கனவே, தென்பகுதியில் 'ஸ்கிறிப்நெற்' ஊடாகத் திரைக்கதை உருவாக்கற் பயிற்சிகளைப் பெற்று, அதிலிருந்து தொிவு செய்யப்பட்ட இரு கதைகளே திரைப்படமாக்கப்படவுள்ளன.

திரைப்பட உதவி இயக்குநர் (**Assistant Director**), படப்பிடிப்பு உதவி இயக்குநர் (**Assistant Cameraman**), கலை உதவி இயக்குநர் (**Assistant Art Director**) ஆகியோர் இவ்விரு படங்களுக்குமாக அனுப்பப்படவுள்ளனர். இதற்காகத் திரைப்பட இயக்கம், படப்பிடிப்புக் கலை போன்றவற்றில் ஆர்வமுள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இதன் அடுத்த கட்டமாக - யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுமுடிந்த திரைக்கதை உருவாக்கல் பயிற்சிநெறி ஊடாகத் தெரிவுசெய்யப்படவுள்ள இரண்டு தமிழ்க் குறும்படங்களுக்கும், தென்பகுதியில் தெரிவுசெய்யப்பட்ட ஒரு தமிழ் குறும் படத்துக்கும் அடுத்ததடுத்த மாதங்கள் தயாரிப்பு வேலைகள் ஆரம்பமாகவுள்ளன.

இதற்கான இயக்குநர்கள், தயாரிப்பாளர்களுக்கான பயிற்சிகளும் மிகவிரைவில் யாழ் .மண்ணில் நடைபெறவிருக்கின்றன.

விண்ணப்பிப்போர் தமது சுயவிபரக்கோவையைத் தபாலுறையிலிட்டு, அதன் இடதுமூலையில் உதவி இயக்குநர் என்று குறிப்பிட்டு - ஞானதாஸ், யாழ்.திட்ட இணைப்பாளர், 'ஸ்கிறிப்நெற்', புறநிலைப் படிப்புக்கள் அலகு, யாழ்.பல்கலைக்கழகம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறும், திறமையானவர்கள் நேர்காணலினூடாகத் தெரிவுசெய்யப்படுவர் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. தெரிவானவர்களுக்கான - பயணவசதி, தங்குமிடவசதி, உணவு ஆகியவற்றுக்கு 'ஸ்கிறிப்நெற்' ஏற்ற ஏற்பாடுகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மறக்கமுடியாத ஜூலைக் கலவரம்

## ஒரு தமிழனின் அனுபவம்

**1983 ஆம் ஆண்டு ஜூலைக் கலவரமானது பெரும்பாலான, ஈழத்தமிழர்களுக்கு ஒவ்வொரு விதமான அனுபவத்தைக் கொடுத்திருக்கும். அந்தவகையில், தனக்கு ஏற்பட்ட அனுபவத்தை இங்கே மீட்கிறார் ராஜன் சக்திவேல்.**

(நேற்றைய தொடர்ச்சி...)

அப்போது, சில சிங்களப் பெண்கள் வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த கூட்டத்திலிருந்து பாய்ந்துவந்து - அந்த முதியவ



ருக்கும், காடையருக்கும் இடையே ஒரு பாதுகாப்புக் கவசமாக நின்றுகொண்டு, அந்தக் காடையரைப் பார்த்து ஏசிக் கத்தினார்கள்.

அங்கே அந்தத் தமிழ் முதியவரது உயிர் பிழைத்துக்கொண்டது.

அந்தச் சிங்களப் பெண்களின் தாய்மை உள்ளத்துக்கு - மனதாரத் தலைவணங்கியவாறு, மேலும் அந்த வழியால் தொடர்ந்து செல்வது புத்திசாலித்தனமல்ல என்ற முடிவுடன், கடற்கரைவழியாகக் கல்கிசையை அடையலாம் என்ற முடிவில், கடற்கரையில் அமைந்துள்ள தண்டவாளத்தின் வழியாகக் கல்கிசையை நோக்கி நடக்கலானேன்.

வெள்ளவத்தையில் காலி வீதியிலிருந்து - கடற்கரை நோக்கிக் குறுக்காக அமைந்த வீதியெங்கும் ஒரே புகைமயமாகவும், மக்களின் அபயக்குரல்களாகவும் அந்தக் கடற்காற்றிலே கலந்துகொண்டிருந்தது.



நான் ராஜசிங்க வீதியை அண்மித்தபோது, பின்னால் ஏதோ சலசலப்புக் கேட்டுக் திரும்பிப் பார்த்தேன்.

சில காடையர்களும் - ஒரு புத்தபிக்குவும் கையில் கத்தி, பொல்லுகளுடன் வந்துகொண்டிருந்தார்கள்.

ஆபத்து பின்னால் நெருங்குவதை உணர முடிந்தது. ஓடினால் 'தமிழன்' என்று இனங்கண்டு, துரத்திப் பிடித்துவிடுவார்கள்.

நடையின் வேகத்தை அதிகரித்தேன். எனினும், கல்கிசைக்கு இன்னும் தூரமிருந்தது. அப்போது வெள்ளவத்தையில் போய்க்கொண்டிருந்தேன். கல்கிசையை அடைய, தெஹிவளை என்னும் இடத்தையும் தாண்டியாக வேண்டும்.

கல்கிசையைச் சென்றடைவேன் என்ற நம்பிக்கை, பின்னால் வந்தவர்களின் தொடர்தலால் மெல்லமெல்ல அகன்றுகொண்டிருநதது.

வீதியெங்கும் சிங்களப் பேரினவாதிகளின் ஆதரவுடன், அரங்கேறிக்கொண்டிருந்த ஈழத் தமிழர்மீதான அட்டூழியங்களையும், அடாவடித்தனங்களையும் நேரடியாகவே பார்த்தவாறு வந்ததால், அந்தப் புத்தபிக்குவுடன் பின்தொடரும் காடையர்களால், எனக்கு என்ன நேருமோ என்ற எண்ணம் என் பதற்றத்தை அதிகரித்துக் கொண்டிருந்தது.

அப்போது இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தை அண்மித்துக் கொண்டிருந்தேன். அதனுள் பல தமிழர்கள் அடைக்கலமாகியிருப்பது மண்டபக் கண்ணாடிச் சுவர்களினூடே தெரிந்தது.

அப்போது யாழ்ப்பாணத்துக்கும், கொழும்புக்கும் பிரயாணசேவையை நடாத்திக் கொண்டிருந்த 'பிள்ளையார் ஸ்ரோர்ஸ் சொகுசு பஸ்' ஒன்று அரைகுறையாக எரிந்து புகைய, மண்டப முன்கண்ணாடிகள் நொறுங்கிப் போயிருந்தன.

அவசரஅவசரமாக உள்ளே நுழைந்துவிட்டேன். அந்தக் காடையர்களும் உள்ளே நுழைந்தார்கள். அவர்களைக் கண்டு மண்டபத்தினுள்ளே இருந்த - பெண்களும், குழந்தைகளும் கூச்சலிட ஆரம்பித்தார்கள். அப்போது அந்த மிஷன் சுவாமிகள் - காவியுடையுடன் முகத்தில் அமைதி தவழ, அபயக் குரலெடுத்து அலறும் அந்த அப்பாவித் தமிழர்களை விலத்தியவாறு, புத்தபிக்குவின் முன்னால் வந்து நின்றுகொண்டார்.

என்னை அழித்துவிட்டு, அப்பால் சென்று உங்களின் வெறியைத் தீர்த்துக் கொள்ளுங்கள் என்னும் போக்கில் ஒரு காவியுடை தரித்த துறவி.

தமிழர்களை அழித்தே தீருவேன் என்னும் நோக்கில், இனவெறி கண்களில் தெறிக்கக் காடையருடன் இன்னொரு காவியுடை தரித்த புத்த துறவி.

இரண்டு வேறுபட்ட குணாம்சம் பொருந்திய துறவிகள் நேரடியாகச் சந்தித்தார்கள்.

அந்தப் புத்ததுறவிக்கு அங்கே குற்றத்தை உணரும் மனப்பக்குவம் ஏற்பட்டதோ, என்னவோ, அவர் காடையர்களை அழைத்துக் கொண்டு திரும்பிச் சென்றுவிட்டார்.

சிறிதுநேரத்தில் அங்கு கூடியிருந்த தமிழ் மக்கள் அனைவருக்கும் சுடச்சுடத் தேநீர் பரிமாறப்பட்டது.

பாலைவனத்தில் ஒரு துளி நீர் கிடைத்ததுபோன்ற உணர்வெழுந்தது.

சுற்றிலும் ஒ்ரே புகைமயமாக இருந்தது. பல தமிழர்களின் உடைமைகள் சூறையாடப்பட்டும், எரியூட்டப்பட்டும் மக்கள் அநாதரவாக இராமகிருஷ்ண மிஷன் மண்டபத்தை நோக்கி வந்துகொண்டிருந்தார்கள். நேரம் செல்லச் செல்லக் கூட்டம் அதிகரித்துக்கொண்டிருந்தது.

குழந்தைகள் பசியால் கதற ஆரம்பித்துவிட்டார்கள். எல்லோரையுமே பசி வாட்டிவதைத்தது.

இனிமேல் என்ன நடக்கப்போகிறது, என்ன செய்யப்போகிறேன் என்பதைக் குறித்து, என்னால் சிந்திக்கமுடியாமல் இருந்தது.

இரவு எட்டு மணியிருக்கும்.

முன்னே பொலிஸ் ஜீப் வண்டிவர, பின்னால் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க லொறிகள் மூன்று வந்தன.

அவற்றில் ஏற்றப்பட்டோம். அவை பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியைச் சென்றடைந்தன.

லொறிகளிலிருந்து பரபரப்பாக இறங்கிய அநேகர், முண்டியடித்தக்கொண்டு உள்ளே ஓடினார்கள். ஏதாவது உணவு வழங்குகிறார்களோ என்று நோட்டமிட்டேன். அப்படியெல்லாம் எதுவுமில்லை. ஒவ்வொரு வகுப்பறைகளாகத் தமக்கு இடம் ஒதுக்குவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

உடைமைகளையும், கட்டிக்காத்த செல்வங்களையும் இழந்து அகதிகளாக அவலங்களுடன், எதிர்காலமே சூனியமாகிவிட்ட நிலையில், ஒரு வகுப்பறையின் வெறும்தரையில் கையோடு எடுத்துவந்த சில சில்லறைப் பொருட்களை வைத்து இடம்பிடிப்பதில் போட்டிபோட்டுக் கொண்டிருந்தார்கள்.

இந்தப் போட்டியானது, அப்போதிருந்த அகதிமுகாமான பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில், ஒவ்வொரு சிறுசிறு விடயங்களுக்குமாகச் சங்கிலிக்கோவையாகப் பின்னிப் பிணைந்து வளர்ந்துகொண்டே சென்றது.

உறங்குவதில் இடந்தேடப் போட்டி, உணவு பெறுவதில் போட்டி, மலசலகூடம் செல்வதில் போட்டி, முகம் கழுவத் தண்ணீர் பிடிப்பதில் போட்டி,. யாழ்ப்பாணம் செல்லக் கப்பலுக்குப் பதிவு செய்வதில் போட்டி.

இத்தனைக்கும் மேலாக இலங்கைத் தமிழன், இந்தியத் தமிழன் என்று போட்டி. இத்தனை போட்டிகளும், அதனால் நிமிடத்துக்குநிமிடம் உருவாகும் புதுப்புதுப் பிரச்



சினைகளுமாக அகதிமுகாம் வாழ்வு வித்தியாசமான - அதேநேரத்தில் தமிழினம் எப்போது ஒற்றுமைப்படும் என்ற ஏக்கத்தையும் தந்ததென்றால் மிகையாகாது.

அழிவுகளும், அவலங்களும் ஈழத்தமிழினத்தின் சுயநல, சுகபோக தேடலை ஒரு புறமாகத்தள்ளி, விட்டுக்கொடுப்புக்களோடு கூடிய ஒற்றுமை உணர்வை வளர்த்தெடுக்குமா என்ற வினாவுக்கு, ஒரு சாதகமான பதில் வெகுதொலைவிலேயே காத்திருப்பதான உணர்வு ஏற்பட்டது.

ஒரு சம்பவம்...

ஒரு யாழ்ப்பாணக் குடும்பம், பல வருடங்களாகக் கொழும்பு வாழ்க்கை என்பதை, அவர்களது செயற்பாடுகள் எடுத்தியம்பின. அவர்களுடன் ஒரு வீட்டுப் பணிப்பெண். அப்போது அங்கே எல்லோரும் அகதித் தமிழர்கள் என்றாலும், அவர்களைப் பொறுத்தளவில் அந்த இளம்பெண் பணிப்பெண்ணாகவே நடாதப்பட்டாள்.

பெரியதொரு கம்பளத்தை விரித்து அதிலே உட்கார்ந்திருந்தார்கள். அந்தப் பெண் அவர்களுக்காக வரிசைகளில் நின்று - தண்ணீர் என்றும், உணவென்றும், அவர்களின் உடுபுடவைகளைத் தோய்ப்பதென்றும் உழைத்துக் கொண்டிருந்தாள். இத்தனைக்கும் அவள் உணவருந்தினாளா, உறங்கினாளா என்பதைப்பற்றி அவர்களுக்கு அக்கறையில்லை. அவள் என்னதான் பணிவிடை செய்தாலும், அவள்மீது வசைபாடுவதிலேயே கவனமாக இருந்தார்கள்.

அவளுக்கு அந்த முகாம் வதைமுகாமானது. அதிலிருந்து விடுபட அவளுக்கு தெரிந்தவழி, அவளது வாழ்க்கையையே மாற்றி



யது. ஆம். அவள் அந்த முகாமில் ஒரு இளைஞனைத் திருமணம் செய்தாள். அந்தத் திருமணம் அங்கு கடமையிலிருந்த பொலிஸாரின் முன்னிலையில் நிகழ்ந்தது.

அந்த யாழ்ப்பாணக் குடும்பத்தின் அதிகாரத்துக்கு, அவள் தனது திருமணத்தின்மூலம் கடிவாளமிட்டாள் என்பதுதான் யதார்த்தம்.

இந்த ஆடிக்கலவரத்தைக் கறுப்பு ஜூலை என்கிறார்களே. இந்தக் கறுப்பு ஜூலையானது, சிங்களப் பேரினவாதத்தால் தமிழினத்தின்மீது வாரியிறைக்கப்பட்ட கறுப்பா? அல்லது தமிழர் மனங்களில் ஆழப்புதைந்திருக்கும் கறுப்பை அகற்ற வந்த ஜூலையா?

யாழ்ப்பாணத்துக்குச் சரக்குக் கப்பலில் செல்லவெனக் கொழும்புத் துறைமுகத்தில் நானும், சில நண்பர்களும் நின்றிருந்தோம்.

பசித்தது. துறைமுகத்தில் சாப்பாட்டுப் 'பார்சல்'களை சிலர் மலிவுவிலையில் விற்பதுண்டு. அங்கு கடமையிலிருந்த இரு சிங்கள இளைஞர்களிடம் விசாரித்தோம்.

அவர்கள் உடனே விரைந்துசென்று, சில சாப்பாட்டுப் பார்சல்களை எடுத்துவந்து தந்தார்கள். பணத்தைக் கொடுத்தபோது வாங்க மறுத்தார்கள்.

'இது நாங்கள் சாப்பிட வைத்திருந்தவை. இந்தக் கலவரத்துக்காக நாங்கள் கவலைப் படுகிறோம். இங்கு எல்லா மக்களும் சமமாக வாழவேண்டும் என விரும்புகிறோம். நீங்கள் மீண்டும் கொழும்புக்கு வரவேண்டும். அதுதான் எங்களுடைய விருப்பம்.'

அவர்கள் கூறிக்கொண்டே போனார்கள்.

நாங்கள் அவர்களிடம் விடைபெற்றுக் கப்பலில் ஏறினோம். கப்பல் காங்கேசன்துறையை நோக்கி நகர ஆரம்பித்தது. ✪

---

# வைத்தியசாலையில் தங்கியிருந்து பொருட்களைத் திருடிய இளைஞன்!

## பாதுகாப்பு உத்தியோகத்தர்களிடம் ஒரு மாதத்தின் பின் மாட்டினார்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில், நோயாளி ஒருவரைப் பராமரிப்பதாகக்கூறி - அங்கு தங்கியிருந்து நோயாளிகளின் பொருட்களைத் திருடியதாகச் சந்தேகிக்கப்படும் இளைஞன் ஒருவனை, வைத்தியசாலைப் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்து, பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

"யாழ். போதனா வைத்தியசாலையில் மகப்பேற்று சிகிச்சைப் பிரிவில், எனது மனைவி அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார். மனைவிக்கு உதவியாகவே நான் வைத்தியசாலையில் இருக்கிறேன்"- எனக் கூறி, கடந்த ஒரு மாதகாலமாக வைத்தியசாலையினுள் தங்கியிருந்த இளைஞனின் நடமாட்டத்தில் சந்தேகங்கொண்ட பாதுகாப்பு உத்தியோகத்தர்கள், கடந்த இரண்டு நாட்களாக இளைஞனைப் பின்தொடர்ந்தனர்.

இதன்போது - இந்த இளைஞன் கூறியபடி அவரின் மனைவியோ அல்லது வேறு உறவினர்களோ வைத்தியசாலையில் அனுமதிக்கப்படடிருக்கவில்லை என்பதை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அறிந்துகொண்டனர்.

இவர், இந்தப் பொய்த் தகவல்களைக் கூறி, கடந்த ஒரு மாதகாலமாக வைத்தியசாலை ஊழியர்களையும், பாதுகாப்பு உத்தியோகத்தர்களையும் ஏமாற்றியதுடன், வைத்தியசாலையில கொடுக்கப்படும் உணவினையும் பெற்றுவந்துள்ளமை, அப்போது தெரியவந்தது. அத்துடன் . நோயாளி ஒருவரின் மணிக்கூட்டையும் இவர் திருடியமையும், விசாரணையில் தெரியவந்ததையடுத்து, குறிப்பிட்ட இளைஞனை வைத்தியசாலை பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பிடித்து, பொலிஸாரிடம் கையளித்தனர்.

# திருகோணமலை - மட்டு வீதியை திறக்க பிரதமரிடம் கோரிக்கை!

திருகோணமலை - மட்டக்களப்பு வீதியைப் போக்குவரத்துக்குத் திறந்துவிட நடவடிக்கை எடுக்குமாறு, 'கின்ஸ்வோ' அமைப்பு- பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும், அமைச்சர்களான திலக் மாரப்பன, ரவூப் ஹக்கீம் ஆகியோருக்கும் மகஜர் ஒன்றினை அனுப்பிவைத்துள்ளது.

சமாதான ஒப்பந்தத்தின் பின், போக்குவரத்துக்குத் தடைப்பட்டிருந்த பல வீதிகள் திறக்கப்பட்டுள்ளன. இந்தநிலையில், திருகோணமலையிலிருந்து மட்டக்களப்புக்குச் செல்வதற்கு மிக்குறைந்த தூரத்தைக்கொண்ட இந்த வீதி, திறக்கப்படாமல் இருப்பது கவலைக்குரியது எனத் தெரிவிக்கப்பட்டுள்ள அந்த மகஜரில் மேலும் -

உத்தியோகபூர்வமாக இந்த வீதி திறந்துவிடப்படாதபோதிலும், சமாதான ஒப்பந்தத்தின் பின் சிறிது காலம் பயன்படுத்த அனுமதிக்கப் பட்டதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

### இலவச மருத்துவ முகாம்

சத்தியபுரம் கிராம தேவாலயத்தில், இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் இலவச மருத்துவ முகாம் நடைபெறவுள்ளது.

தியாகி அறக்கொடை நிறுவனத்தின் அனுசரணையுடன், யாழ். போதனா வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர் நா.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் இந்த இலவச மருந்துவ முகாம் நடைபெறும்

# தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் உத்தியோகபூர்வ ஆரம்பம்; அவுஸ்திரேலியப் பிரதமரும் வாழ்த்துச் செய்தி அனுப்பினார்!



வானொலி மாமா மகேசன் மங்கல விளக்கேற்றுகிறார்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், உலக நாடுகளில் இயங்கும் ஏனைய வானொலிகளில் இருந்து வேறுபட்ட நோக்கெல்லையுடன் நிறுவப்பட்டதொன்றாகும்.

பல்லின மக்கள் வாழும் அவுஸ்திரேலியாவில், தனிப்பட்ட சமூகங்களின் தேவைகளை நிறைவுசெய்யும் நோக்குடன் சமூக வானொலிகள் இயங்கிவருகின்றன. இத்தகைய வானொலிகளை, அவுஸ்திரேலிய சமூக வானொலிகளின் சங்கம் அங்கத்தவர்களாகச் சேர்த்து, அது விதித்துள்ள நடைமுறை விதிகளைப் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்துகின்றது.

சமூக வானொலியின் அடிப்படை விதியாக - அது வியாபார நோக்கற்றதாகவும், இலாபம் பெறுவதையே நோக்காகக் கொண்டு இயங்காத அமைப்பாகவும், சமூகத்தைப் பிரதி



சமஷ்டி எதிர்க்கட்சித் தலைவர் சைமன் கிறீனின் செய்தியை வாசிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோன் மர்பி.

நிதித்துவப்படுத்துவதாகவும் அமைதல் வேண்டும். இக்கட்டுப்பாடுகளுக்கு அமைய, அமைக்கப்பட்ட சமூக வானொலியே அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்.

அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், கடந்த 14 மாதங்களாகத் தினம் தோறும் 24 மணி நேரமும் இயங்கிவந்த போதிலும், கடந்த - 12 ஜூலை 2003 இலேயே அது உத்தியோகபூர்வமாக ஆரம்பித்துவைக்கப்பட்டது.

இந்தத் தொடக்க விழாவான கலை ஒலி மாலை, கோலாகலமாக Strathfield இல் உள்ள மிகப் பிரமாண்டமான Sydney Adventist College Auditorium இல் நடைபெற்றது. ஏறத்தாழ ஐந்தரை மணிநேரம் நீடித்த இந்த விழாவில், ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர். அத்துடன், முக்கிய அரசியல் பிரமுகர்கள் மற்றும் சமூக வானொலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து விழாவைச் சிறப்பித்ததுடன், வானொலிக்குப் பாராட்டும் வாழ்த்தும் தெரிவித்தனர்.

தமிழ்மக்கள், பெரியளவில் கலந்துகொண்டமை - சமூக வானொலியான அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், மக்களின் மனங்கவர்ந்த வானொலி என்பதை மட்டுமன்றி, அதற்கு வளம் மிகுந்த எதிர்காலம் உள்ளதென்பதையும் பறைசாற்றி நின்றது.

விளம்பரத்தில் குறிப்பிட்ட நேரத்தில், தமது நிகழ்ச்சிகளை தமிழர்களாலும் ஆரம்பிக்க முடியும் என்பதை உறுதிப்படுத்தும் வகையில், குறித்த நேரமான மாலை 5.30 மணிக்கு, கலை ஒலி ஆரம்பித்தது முதற்கொண்டு விழா களைகட்டத் தொடங்கியது.



அவுஸ்திரேலிய பிரதமர் ஜோன் ஹவார்ட்டின் வாழ்த்துச்செய்தியை, நாடாளுன்ற உறுப்பினர் றோஸ் கமரோன் வாசிக்கிறார்.

செல்லையா கேதீசன், வந்தவர்களை வரவேற்று, அன்றைய நிகழ்ச்சியின் பிரதான அறிவிப்பாளராக விளங்கவுள்ள மகேஸ்வரன் பிரபாகரனை அறிமுகப்படுத்த, அவர் தனது சக அறிவிப்பாளர்களான விஜயகுமாரி சுந்தரமூர்த்தியையும் அபர்ணா சுதந்திரராஜையும் அறிமுகப்படுத்தினார். அதைத் தொடர்ந்து - வானொலி மாமா நா. மகேசன் மங்கல விளக்கேற்றி, தமிழ் மரபுக்கேற்ற முறையில் விழாவைத் தொடக்கி வைத்தார்.

இவ்வாறு தொடக்கிவைக்கப்பட்ட இவ்விழா, வானொலித் தயாரிப்பாளர்கள் ஒன்றன் பின் ஒன்றாக வழங்கிய நிகழ்ச்சிகளால் ரசிகர்களை மகிழ்வித்தது.

விழாவுக்கு அவுஸ்திரேலிய பிரதமர் John Howard இன் பிரதிநிதியாக, மத்திய அரச பரமற்றா தொகுதி நாடாளுமன்ற உறுப்பினரும், குடும்ப விவகார சமூக சேவைகள் அமைச்சின் செயலாளருமான நாடாளுமன்ற உறுப்பினர் Ross Cameron (Federal MP for Parramatta) கலந்துகொண்டார். லோ தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் John Murphy (Federal MP for Lowe), எதிர்க்கட்சித் தலைவர் Simon Crean இன் பிரதிநிதியாகவும் கலந்துகொண்டதுடன், மத்திய அரச நாடாளுமன்ற உறுப்பினரான Laurie Ferguson (Federal MP for Reid) கலந்துகொண்டார்.

மேலும், நியூ சவுத் வேல்ஸ் முதல்வர் Bob Carr இன் பிரதிநிதியாக நியூ சவுத் வேல்ஸ் Strathfield நாடாளுமன்ற உறுப்பினர் Virginia Judge, Strathfield நகர பிதா John Abi Saab ஆகியோர் கலந்துகொண்டனர்.

குடும்ப விவகார சமூக சேவைகள் அமைச்சின் செயலாளரான Ross Cameron அவுஸ்திரேலிய பிரதமரின் வாழ்த்துச் செய்தியை வாசித்ததுடன், தனது வாழ்த்தையும் தெரிவித்தார். அரச வானொலியான விசேட ஒலிபரப்பு (SBS) வானொலியின் முக்கியஸ்தர்களும் கலந்துகொண்டனர்.

அவுஸ்திரேலிய பிரதமர் தனது வாழ்த்துச் செய்தியில் பின்வருமாறு தெரிவித்திருந்தார்.

எமது சமூகத்திலுள்ள தமிழர், அவுஸ்திரேலியாவில் வாழும் தமக்கும், தமது சந்ததியினருக்கும் உறுதியான எதிர்காலத்தைக் கட்டியெழுப்பியுள்ளனர். இளைஞர், முதியோர், புதிதாக இங்கு வருவோர் உள்ளிட்ட அனைத்துத் தமிழர்களுக்கும் இந்தத் தமிழ் வானொலி, தகவல்களையும், ஆதரவையும் வழங்கும் முக்கிய தலையூற்றாக விளங்குகின்றது.

அத்துடன், அது அவுஸ்திரேலியாவில் உள்ள தமிழ்மக்களின் பண்பாட்டு மரபைத் தொடர்ந்து பாதுகாத்தும், மேம்படுத்தியும் வருகின்றது. அவுஸ்திரேலியாவிலுள்ள பல்வேறு பண்பாடுகளின் வேறுபாடுகளில் காணப்படும் பல நன்மைகளை நெறிப்படுத்திப் பெறுவதற்கும், ஒத்திசைவான சமூகத் தொடர்புக்கு ஆதரவு தந்து பேணுவதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

பொறுமையும் ஒத்திசைவும் உள்ள எமது சமூகத்தில், அடிப்படை ஆதாரமாக விளங்கும் ஒத்துழைப்பு மனப்பாங்கையும், பரஸ்பர புரிந்துணர்வையும் முனைப்பாக்குவதற்கு, சமூகவானொலியை ஆரம்பிப்பவர்கள் பங்களிக்கலாம். உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்ட அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தைப் புகழ்ந்த அவுஸ்திரேலியப் பிரதமர், தமிழ்ச் சமூகத்தின் சுயமான முயற்சியாலன்றி, இவ்வாறு வானொலி ஆரம்பமாவது சாத்தியமாயிருக்க முடியாது என்று பாராட்டியிருந்தார்.

அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் உத்தியோகபூர்வ ஆரம்பத்தை வாழ்த்திப் பாராட்டிய நியூ சவுத் வேல்ஸ் மாநில முதல்வர் Bob Carr , தமிழ்ப் பண்பாட்டை மேம்படுத்தவும், அதேநேரத்தில் அவுஸ்திரேலிய வாழ்வில் முழுமையாகப் பங்குபெற உதவுவதற்கும் தமிழ்ச் சமூகத்திற்கு முக்கிய தகவல்களை வழங்குவதற்கும் இது முக்கியமான சேவை எனக் குறிப்பிட்டார். முதல்வரின் இந்த வாழ்த்துச் செய்தியை வாசித்த Virginia Judge, தனது வாழ்த்தையும் தெரிவித்தார்.

ஒரு குறிப்பிட்டளவு புதுமுறை நிகழ்ச்சிகளின் மூலம் தமிழ்ப் பண்பாடு, மொழி, அடையாளம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக உறுதிபூண்டு, அதைச் செயல்முறையில் மெய்ப்பித்துக் காட்டிவரும் தமிழ்ச் சமூகத்துக்கு, இந்தச் சமூக வானொலியின் உத்தியோகபூர்வ ஆரம்பம் பெருமையுடன் இன்னொருபடி முன்னேற்றத்தைக் குறிக்கின்றது என்று எதிர்க் கட்சித் தலைவர் Simon Crean தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டார். அவரது செய்தியை வாசித்த John Murphy, தனது தனிப்பட்ட வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவித்தார்.

இந்த வாழ்த்துக்களுடன் கலை ஒலி மாலை நிகழ்ச்சிகள் விறுவிறுப்புடன் முன்னேறின.



கலைநிகழ்ச்சிகளில் ஒரு காட்சி.

சின்னஞ்சிறு பிள்ளைகள் பாடிய தமிழ் வாழ்த்தும், பிள்ளைகள் அழகிய தமிழில் பேசி நடித்த 'ஔவை வந்தால்' நாடகமும், இளைஞர்கள் கவர்ச்சிகரமாக வழங்கிய Fashion Parade உம், சிறுவர்கள் வழங்கிய Modern Kannan புதுமை நடனமும், பின்னர் இடம் பெற்ற பரதநாட்டியமும், வானொலித் தயாரிப்பாளர்கள் வழங்கிய 'உன்னாணை நான் ஊருக்குப் போகிறேன்' என்ற நகைச்சுவை நாடக

**சிவா பிரபாகரன்**

மும், மெல்போர்னைச் சேர்ந்த சுவரமேனிய இசைக்குழு வழங்கிய இசை விருந்தும் என, நிகழ்ச்சிகள் ஒன்றன் பின் ஒன்றாக வந்து ரசிகர்களை மகிழ்வித்தன.

இவற்றுக்கிடையில், அவுஸ்திரேலிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் பல்வேறு சுவையான நிகழ்ச்சிகளை வழங்கிவரும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களை, அங்கு ஓய்வின்றி உழைக்கும் தொழில்நுட்ப வல்லுநர்களை, சௌந்தரி சிவானந்தனின் அழகான கவிதையில் அவரும் மதுரா மகாதேவும் அறிமுகம் செய்து வைத்தமை நிகழ்ச்சிக்கு மேலும் சிறப்புச்



நியூ சவுத்வேல்ஸ் முதல்வர் பொப் காரின் செய்தியை நாடாளுமன்ற உறுப்பினர் வேர்ஜினியா ஜட்ஜ் வாசிக்கின்றார்.

சேர்த்தது.

தத்து நடைபோடு முன்னரே, எழுந்து வீறு நடை போட ஆரம்பித்த சமூக வானொலியான அவுஸ்திரேலிய தமிழ் ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், இந்த உத்தியோகபூர்வமான ஆரம்ப விழாவின்பின் மேலும் வீறுகொண்டு செல்ல உறுதிபூண்டுள்ளதுடன், தமிழ்ச் சமூகத்தின் ஒற்றுமைக்கும், மேன்மைக்கும் உழைப்பதையும் தமிழ்ப் பண்பாட்டையும் மொழியையும் தொடர்ந்து பேணி அவற்றை அடுத்த சந்ததிக்கு வழங்குவதையும் தனது மேலான நோக்கங்களாகக் கொண்டுள்ளது. ★

# பிரிட்டிஷ் விஞ்ஞானி கெலி மரணம்; பிரதமர் ரொனி பிளேயர் மீது நெருக்கடி

## கை வெட்டுண்ட நிலையில் சடலம் மீட்கப்பட்டது



ரொனி பிளேயர்

மர்மமான முறையில் நேற்று முன்தினம் மரணமடைந்த பிரிட்டிஷ் அணு விஞ்ஞானி கலாநிதி டெவிட் கெலி, இடது கை மணிக்கட்டுப் பகுதியில் ஏற்பட்ட ஆழமான வெட்டினாலேயே இறந்துள்ளதாக, பிரேத பரிசோதனைகள் மூலம் தெரியவந்துள்ளது. கத்தி ஒன்றும் வலிநீக்கி மருந்துப்பை ஒன்றும் அவரின் சடலம் கிடந்த காட்டுப்பகுதியிலிருந்து பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளன.

ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பதாக, பொய்யான தகவல்களை வெளியிட்டே, அந்நாட்டின் மீது பிரிட்டன் படையெடுத்ததாக, கலாநிதி கெலி, பி.பி.ஸிக்கு அண்மையில் வழங்கிய தகவலைத் தொடர்நது, நேற்றுமுன்தினம் யோர்க்ஷேயர் காட்டுப் பகுதியில் அவரின் சடலம் மீட்கப்பட்டது தெரிந்ததே. கொலை குறித்து முழுமையான விபரங்கள் வெளியிடப்படாத போதிலும், அவரின மரணம் - பல சந்தேகங்களை பிரிட்டனில் ஏற்படுத்தியுள்ளது. கெலியின் மர்மமரணம் குறித்து விசாரணைகள் நடத்த, பிரிட்டிஷ் அரசு குழுவொன்றையும் அமைத்துள்ளது. தற்போது ஆசிய சுற்றுப்பயணம் மேற்கொள்



டேவிட் கெலி

ளும் பிரிட்டிஷ் பிரதமர் பிளேயர், நேற்று ஜப்பானில் கெலியின் மரணம் குறித்த செய்தியாளர்களின் சரமாரியான கேள்விகளால் துளைத்தெடுக்கப்பட்டார்.

விசாரணைகள் முடியும்வரை எதுவும் தெரிவிக்கமுடியாது என்று மட்டுமே பிளேயர் பதிலளித்தார்.

# வங்கிக் காவலில் நின்ற சிப்பாய் பக்தாத்தில் சுட்டுக் கொலை

பக்தாத்தில், வங்கி ஒன்றின் முன்பாக காவல் கடமையில் நின்ற அமெரிக்கச் சிப்பாய் ஒருவர் நேற்று சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து, அப்பகுதியில் அமெரிக்கப் படையினர் மேற்கொண்ட பாரிய சுற்றிவளைப்பில், 1200 ஈராக்கியர்கள் கைதாகியுள்ளனர்.

உலகவலம்

நேற்று அதிகாலை இரண்டு மணியளவில், அல்-ரஷீத் வங்கி முன்பாக நின்ற சிப்பாயே சுட்டுக்கொல்லப்பட்டார்.

இதேவேளை, கடந்த வெள்ளியன்று நடைபெற்ற இரு வேறு அதிரடித் தாக்குதலில், ரோந்து சென்ற அமெரிக்கப் படையினரில் ஒருவர் கொல்லப்பட்டதாகவும், மற்றொருவர் காயமுற்றதாகவும், மூன்று இராணுவ வாகனங்கள் சேதமுற்றிருப்பதாகவும அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர். ரொக்கட் மற்றும் தொலை இயக்கி கருவி மூலம் இயக்கப்படும் குண்டு என்பவற்றால் இத்தாக்குதல்கள் நடைபெற்றன.

## ஹீத்ரோவில் நெருக்கடி

(லண்டன்)

லண்டன் ஹீத்ரோ விமான நிலைய அமைய ஊழியர்களின் திடீர் வேலை நிறுத்தத்தினால், கடந்த இரண்டு நாட்களில் மட்டும் இந்த விமானநிலையமூடாக பயணத்தை மேற்கொள்ள வந்த, 80 ஆயிரம் விமானப் பயணிகள் பெரும் நெருக்கடிகளைச் சந்தித்தனர்.

பல விமானசேவைகள், நேற்று முன்தினம் முதல் ரத்தாகியுள்ளன. தம்மால் எதுவும் செய்யமுடியாமல் இருப்பதாக ஹீத்ரோ விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
The Namathu Eelanadu
The Leading Daily of Tamils' Homeland

உங்கள் நிறைவு.... எங்கள் சேவை.
மோட்டார் சைக்கிள்களைச்
சிறப்பாகச் சேவிஸ் செய்து
கொள்ள நாடுங்கள்



இரத்தினம் ஊர்தி சேவைத்தளம்
32 சிறாம்பியடி வீதி, யாழ்ப்பாணம்.
வணிக விடுமுறை நாள்கள் தவிர்ந்த
எல்லா நாள்களிலும் (ஞாயிறு உட்பட)
சேவிஸ் செய்து கொள்ளலாம். (சி-1170)

# இனவாதத்தைத் தூண்டும் வகையில் அமைச்சர் அதாவுல்லா பேசுகின்றார்!

## ரெலோ செயலாளர் பிரசன்னா கண்டனம்

இலங்கை அரசாங்கமும், தமிழீழ விடுதலைப் புலிகளும் போர்நிறுத்தத்தைக் கடைப்பிடித்து - சமாதான பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டுவரும் நிலையில் - பெருந்தெருக்கள் அமைச்சர் அதாவுல்லா, வடக்கையும் கிழக்கையும் பிரிக்க வேண்டுமென பகிரங்கமாகப் பேசியிருப்பதை அரசாங்கம் கண்டும் காணாது இருக்கக்கூடாது எனவும், சமாதான சூழலைக் குழப்பும் வகையில் அமைச்சர்கள் பேசுவதை அனுமதிக்கக்கூடாது எனவும், ரெலோ செயலாளர் நாயகம் இந்திரகுமார் பிரசன்னா விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் பதவியில் இருப்போர் இன ரீதியாக நோக்காது, தேசிய நலன் சார்ந்து சிந்திக்கத் தவறிய தன் விளைவாகவே, நாடு பாரிய அவலத்தை எதிர்நோக்கிவருகிறது. இனப்பிரச்சினைத் தீர்வின் அடிப்படை அம்சம், வட - கிழக்கு இணைந்த தாயகம் என்பதே எனக் குறிப்பிட்டுள்ள பிரசன்னா, சக சிறுபான்மை இனமாக இருந்துகொண்டு, பேரினவாதிகளின் நலன் சார்ந்து சிந்திப்பது கவலையை அளிக்கிறது எனவும், அந்த அறிக்கையில் கூறியுள்ளார்.

சகல தமிழ்க்கட்சிகளுமே வட-கிழக்கு இணைப்பை விட்டுக் கொடுக்கமாட்டார்கள் என்ற நிலையில் வட- கிழக்கை பிரிக்க வேண்டுமென, அமைச்சர் அதாவுல்லா குறிப்பிட்டிருப்பது - தமிழ் முஸ்லிம் சமூகங்களுக்கிடையே விரிசலை ஏற்படுத்தலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இன்றைய சமாதான பேச்சுவார்த்தையும், போர்நிறுத்த சூழலும் தமிழ் மக்களது ஒப்பற்ற தியாகத்தினாலேயே ஏற்பட்டதென்பதில் - இரு வேறு கருத்துக்களுக்கு இடமில்லை என்பதால், இதனைக் குழப்பவிரும்பும் பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும் வகையில் முஸ்லிம் அரசியல்வாதிகள் செயற்படக்கூடாது என்றும், ரெலோ செயலாளர் நாயகம் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## மேலும் 22 தமிழ் அகதிகள் நெடுந்தீவு வந்தடைந்தனர்

தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருந்த, மேலும் ஒரு தொகுதி அகதிகள் நேற்று நெடுந்தீவை வந்தடைந்தனர்.

நேற்று பி.ப. 2 மணியளவில் நெடுந்தீவு - கோட்டைக்காட்டுப் பகுதிக்கு, பத்துக் குடும்பங்களைச் சேர்ந்த 22 அகதிகள் வந்துசேர்ந்தனர். இவர்களில் - நெடுந்தீவைச் சேர்ந்த 13 பேரும், அனலைதீவு, புங்குடுதீவு, அச்சுவேலி, யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 9 பேரும் அடங்குவதாகத் தெரிய வருகிறது.

இவர்கள் அனைவரையும்- இன்று யாழ்.அரச அதிபரிடம் நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் கையளிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (113)

### கலைஞர்களுக்கான ஒன்றுகூடல்

வலிகாமம் கோட்டத்திற்குட்பட்ட வலிகிழக்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் தெற்கு, வலிகாமம் மேற்கு, வலிகாமம் தென்மேற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளுக்குட்பட்ட - கலைஞர்கள், படைப்பாளிகளுக்கான சந்திப்பு - இன்று மாலை 3 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

### தென்மராட்சி...

இதேசமயம் - கச்சாய் துறைமுகப் பகுதியிலிருந்து, இரண்டு கிலோமீற்றர் தொலைவிலுள்ள சாளம்பன்தீவுக்கு, பனைமரக் குற்றிகளாலான நடைபாதையொன்றும் கடலினூடாகப் படையினரால் அமைக்கப்பட்டு வருகின்றது. (36)

## இடைக்கால நிர்வாக வரைபு

# ஜனாதிபதி நடவடிக்கை எடுத்தால் நிதி உதவி கிடைப்பது சந்தேகமாம்

விடுதலைப் புலிகளிடம் அரசாங்கம் சமர்ப்பித்த இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைக்கு எதிராக, ஜனாதிபதி சட்டரீதியான நடவடிக்கை எடுத்தால், ரோக்கியோ மாநாட்டின் மூலம் இலங்கைக்கு கிடைக்கவிருக்கும் நிதியுதவிகள் பாதிக்கப்படும் நிலை உருவாகுமென, கொழும்பிலுள்ள சட்டவல்லுநர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்திற்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தையையடுத்து, வடக்கு -கிழக்கின் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கையை மேற்கொள்ளுவதற்கு, ரோக்கியோவில் நடைபெற்ற உதவி வழங்கும் மாநாட்டில் பெருமளவான நிதி வழங்குவதற்கு, உதவி வழங்கும் நாடுகள் முன்வந்தன.

அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் சமாதான நடவடிக்கைகளை துரிதப்படுத்திப் பேச்சுக்களைத் தொர வேண்டும் என, உதவிவழங்கும் நாடுகள் கோரியிருந்தன.

இந்த நிலையில், தற்போது ஜனாதிபதியின் இணக்கப்பாடின்றி அரசினால், விடுதலைப் புலிகளிடம் இடைக்கால நிர்வாகம் தொடர்பான அரசினுடைய யோசனை கையளிக்கப்பட்டுள்ளது.

அரசு சமர்ப்பித்திருக்கும் இடைக்கால நிர்வாகம் தொடர்பான யோசனைகளுக்கு எதிராக, சட்டரீதியான நடவடிக்கை எடுப்பதற்கு ஜனாதிபதி முயற்சித்தால், நிதி உதவி கிட்டுவதில் பிரச்சினைகள் எழுமென சட்டவல்லுநர்கள் கருதுகின்றனர்.

# முல்லைத் தளத்தின் வெற்றி...

ளையின் திருவுருவப்படத்திற்கான பொதுச்சுடரை ஏற்றி, மலர்மாலையை முல்லைத்தீவு மாவட்ட அரசியற் துறைப் பொறுப்பாளர் முகுந்தன் அணிவித்தார்.

கடற்கரும்புலி மேஜர் கண்ணபிரானின் திருவுருவப்படத்திற்கு ஈகச்சுடர் ஏற்றி, மலர்மாலை அணிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, கடற்கரும்புலி மேஜர் பார்த்திபனின் திருவுருவப்படத்திற்கு, முல்லைத்தீவு மாவட்ட காவல்பணிமனைப பொறுப்பாளர் சுந்தர் ஈகச்சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

கடற்கரும்புலி மேஜர் சுடரொளியின் திருவுருவப்படத்திற்கு, முல்லைத்தீவு மாவட்ட மகளிர் அரசியற் துறைப் பொறுப்பாளர் குவேனி சுடரேற்றி மலர்மாலை அணிவித்தார்.

கடற்கரும்புலி மேஜர் மதுபாலனின் திருவுருவப்படத்திற்கு, முல்லைத்தீவு மாவட்ட கடற்புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் ரங்கன் சுடரேற்றி மலர்மாலை அணிவிததார்,

கடற்கரும்புலி கப்டன் சயந்தனின் திருவுருவப் படத்திற்கு, விடுதலைப புலிகளின் கலை பண்பாட்டுக்கழக மகளிர் பொறுப்பாளர் மகேசும், கடற்புலி லெப்.கேணல் சுதர்சனின் திருவுருவப்படத்திற்கு, அவரது தந்தையாரும், கரும்புலி மேஜர் பதுமனின் திருவுருவப்படத்திற்கு, நிகழ்வின் ஏற்பாட்டாளர் குலமும் ஈகச்சுடர்களையேற்றி மலர்மாலைகளை அணிவித்தனர்.

ஆரம்ப நிகழ்வு - கடற்புலிகளின் முல்லைத்தீவு மாவட்ட மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் சுதர்சன் தலைமையில் நடைபெற்றது.

அரங்க நிகழ்வுகள் - முல்லைத்தீவு மாவட்ட பொதுஜன அமைப்புக்களின் ஒன்றியத்தலைவர் வேதவனம் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் - வடமுனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன், முல்லைத்தீவு பங்குத்தந்தை வண. பத்திநாதர் அடிகளார் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்.

தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்த நிகழ்வுகளில் பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர். (லி)

# வடக்கு-கிழக்கு இடைக்கால...

புனர்வாழ்வு நிதியம் தவிர்ந்த ஏனைய நிதியுதவிகள் விசேட நிதியமொன்றினூடாக வழங்கப்படும்.

### மாவட்டக் குழுக்கள்

இடைக்கால நிர்வாகசபைக்கு உதவுவதற்கென, மாவட்ட அடிப்படையிலும் குழுக்கள் நியமிக்கப்படும். மாவட்டக் குழுக்களுக்கான தலைவர் இடைக்கால நிர்வாசபை உறுப்பினர்களிலிருந்து தெரிவு செய்யப்படுவார்.

ஒவ்வொரு மாவட்டத்துக்குமான உறுப்பினர்களை இடைக்கால நிர்வாகசபையே தெரிவுசெய்யும். இதன்போது - இன விகிதாசாரம் கவனத்தில் எடுக்கப்படும்.

இந்த மாவட்டக் குழுக்களுக்கு- அந்தந்த மாவட்ட அரச அதிபர்கள் செயலாளராகவும், பிரதம நிறைவேற்று அதிகாரியாகவும் கடமையாற்றுவர்.

இடைக்கால நிர்வாக சபை மேற்கொள்ளும் அபிவிருத்தித் திட்டங்களை உரியமுறையில் செயற்படுத்துவதற்கு, ஒவ்வொரு மாவட்டக்குழுவும் உதவும். மாவட்ட சபைகள் தமது செயற்பாடுகளை இலகுவாக்கிக் கொள்வதற்காக, மாவட்ட அளவில் உபகுழுக்களையும் அமைத்துக் கொள்ளமுடியும்.

### இடைக்கால நிர்வாகசபையின் ஏனைய குழுக்கள்

இடைக்கால நிர்வாகசபையானது, தனது பணிகளை வலுவுடன் மேற்கொள்வதற்காக மூன்று விசேட குழுக்களை அமைத்துக்கொள்ளலாம். பொருளாதார விவகாரங்கள், உட்கட்டமைப்பு, அத்தியாவசியத் தேவைகள் ஆகிய மூன்று பிரிவுகளிலும் இக்குழுக்கள் அமைக்கப்படும்.

இவற்றுக்கு உறுப்பினர்களாக- நான்கு உறுப்பினர்களுக்கு மேறபடாதவர்கள் இடைக்கால நிர்வாகசபையில் இருந்தும், குறிப்பிட்ட துறையில் நிபுணத்துவம் பெற்றவர்களிடமிருந்தும் நியமிக்கப்படுவர். இந்தக்குழுக்களுக்கான தலைவர் இடைக்கால நிர்வாகசபையில் இருப்பது அவசியமானதாகும்.

### இடைக்கால நிர்வாகசபையின் காலஎல்லை

இது, அரசாங்கத்தினாலும் விடுதலைப் புலிகளினாலும் தீர்மானிக்கப்படும். இந்தக் காலஎல்லை பற்றி, ஆறு மாதங்களுக்கு ஒருதடவை இருதரப்பும் சந்தித்துக்கொள்ளும்.

### அமெரிக்காவுடன்...

படகுகளுக்கு நவீன ராடர் கருவிகளை பொருத்துவதற்கு 769 மில்லியன் அமெரிக்க டொலர்களையும் வழங்க அமெரிக்கா உடன்பட்டிருப்பதாக அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் குறிப்பிட்டார். (01)

### வரலாற்று ரீதியாக...

மோட்டார்களையும் கைப்பற்றியது மட்டுமல்லாது, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த 'ஓயாத அலைகள் 2, 3, 4;', ஜெயசிக்குறு எதிர் சமர் ஆகிய சமர்களுக்கும் இந்தப் பீரங்கிகளைப் பயன்படுத்தி வெற்றியீட்டியமையானது, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாகியுள்ளது எனக் குறிப்பிட்டார்.

### ஐ.நா.அமைதி...

களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஐ.நா அமைதிப்படை கட்டமைப்பு, மன அழுத்த முகாமைத்துவம், செய்நெறிமுறைகள், சிறுவர் உரிமை, நடத்தை, மனித உரிமை, தொடர்பாடல், சமரசப்பேச்சு போன்ற பல்வேறு விடயங்களில் இந்தப் பயிற்சிகள் வழங்கப்பட்டன.

இறுதிநாள் நிகழ்வில் - இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் பலகல்ல, இந்திய இராணுவத்தின் லெப்டினன்ட் கேணல் தர அதிகாரியும் இப்பயிற்சி நெறியின் இயக்குநருமான வசந்த் மான்டே, அவுஸ்திரேலிய கடற்படை கப்டன் கரோலின் பிராண்ட் போன்ற உயரதிகாரிகளும் பங்கேற்றனர்.

### காவலரணுக்கு...

தொழிலை முடித்து திரும்பும் மீனவர்கள் - தமது படகுகளை, படையினரின் காவலரணுக்கு அருகில் நிறுத்தவேண்டுமென உத்தரவிட்டார்.

இதற்கு மீனவர் தரப்பில் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது. இராணுவ காவலரணுக்கும், கடற்கரைக்கும் இடையில் நீண்டதூரம் இருப்பதால் தம்மால் தினமும் படகுகளை இவ்வாறு நிறுத்துவது முடியாத காரியம் என மீனவர்கள் தரப்பில் எடுத்துக் கூறப்பட்டது.

எனினும், படையதிகாரி தனது நிலைப்பாட்டில் உறுதியாக இருந்ததுடன், நேற்று காவலரணுக்கு அருகில் படகுகளை நிறுத்திவைக்க மீனவர்களைப் பலவந்தப்படுத்தினார்.

இது குறித்து கற்கோவளம் பகுதி மீனவர்கள், வடமராட்சி கடற்தொழிலாளர் சங்க சமாசத்திடம் முறையிட்டுள்ளனர். (09)

மணமகள் தேவை
இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் பணிபுரியும் விசாக நட்சத்திர 1972 இல் பிறந்த லண்டன் பிரஜாவுரிமையுள்ள மணமகனுக்கு அழகிய 5 அடி உயரமுள்ள மணமகள் தேவை. சாதகக்குறிப்பு, புகைப்படம் மற்றும் விபரங்களுடன் நேரில் அல்லது தபால் மூலம் தொடர்பு கொள்ளவும்.
கிருஷ்ணமூர்த்தி,
தேவி அச்சக ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
T.P.- 2789
(சி-422)

சக்தியின் உதயம்
ஹினோடே




உங்களுக்கு மிற்சுயியைத் தந்த
டோக்கியோ சீமெந்து நிறுவனம் வழங்கும்
ஹினோடே சீமெந்து
இலங்கை மக்களின் நம்பிக்கையை
மேலும் வலுப்படுத்தி கட்டட நிர்மாணத்
துறையில் புத்தொளி பரப்புகிறது
ஹினோடே
சீமெந்து
(சி/1203)
சக்தியின் முன்னணியில்

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 20.07.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.